தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

| மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மாசி 23 (7-3-'59). சனிக்கிழமை | இதழ் 38 |

★ ஆடிய ஆட்டம் அறியோமோ! ★

முதலாளித்துவ நாடு அமெரிக்கா என்பதற்காக அதைத் தூற்றியும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ளது இரஷ்யா என்பதற்காக அதைப் போற்றியும் பாடும் பண்பில்லை தி. மு. கழகத்திற்கு. நேர்மைக்கும் நியாயத்திற்கும் என்றும் தலைவணங்கும் தன்மை உடையது நமது கழகம். பணம் கண்டு குணம் இழக்கும் பண்பில்லை நமக்கு. எந்த நாடாக இருந்தாலும் அது எந்த அளவிற்கு முற்போக்கு அடையாத நாடுகளுக்கு பொருளாதாரத் துறையில் உதவி செய்கிறதோ அதைப் பொருத்துத்தான் அந்த நாட்டின் செல்வாக்கு கணக்கிடப்பட்டு வருகின்றது. சமீபகாலமாக தப்புப் பிரசாரம், பொய்ப்பிரசாரம் முதலியவை செய்வதில் புலிகள் எனப் பெயர்பெற்ற காம்ரேடுகள் தி. மு. கழகத்தைத் தாக்கிக்கொண்டு வருகிறார்கள். அறிஞர் அண்ணா அமெரிக்க நிருபருக்குப் பேட்டி கொடுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக, நம்மை எல்லாம் அமெரிக்க தாசர்கள் என்று அழைப்பதில் தனி இன்பம் காணுகின்ற இந்தக் காம்ரேடுகள் போற்றிப் புகழ்கின்ற இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரும்பாலும் அமெரிக்க 'டாலர்' மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன. நம்மை அமெரிக்க அடிவருடி என்று அழைக்கும் இந்த இரஷ்ய அடிவருடிகளின் எசமானரும் இரஷ்யாவைக் கடுமையாகத் தாக்குகிறார். பொருளாதார அறிஞர் **பி. வி. நாராயண ரெட்டி.** உதட்டளவில்தான் நமக்கு இரஷ்யாவிடமிருந்து உதவி கிடைக்கிறதே தவிர, செயலளவில் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்துதான் கிடைக்கின்றன என்று குறிப்பிடுகிறார். பொருளாதாரப் பிற்போக்குள்ள நாடுகளின் வளர்ச்சிக்கு அமெரிக்கா **2.8 பில்லியன் டாலர்கள்** இனாமாகக் கொடுத்திருக்கிறது. **1954-1956** ஆண்டுகளில்; ஆனால் ரஷ்யா **1.5 பில்லியன் டாலர்கள்** கடனாகக் கொடுத்திருக்கிறது, 1954 - 1956ஆண்டுகளில் என்று ஐக்கிய நாடுகள் மன்றப் புள்ளி விபரம் கூறுகிறது. நிற்க, அணு ஆயுதப் பரிசோதனை நிறுத்தத்திற்கு ஒரு உடன்பாடு காண வேண்டும் என்ற நெடுநாளைய ஆவல் அமெரிக்காவின் அயல் நாட்டுக் கொள்கைகளின் காரணமாகத்தான் தடைப்பட்டு வருகிறது என்பது பெரும்பாலோரின் கருத்து. இந்த ஆயுதப் பரிசோதனை சம்பந்தமாக ஏதாவது ஒரு உடன்பாடு ஏற்பட்டால் அதன்படி தான் வாக்கு பிசகாமல் நடப்பதாக இரஷ்யா கூறுகிறது. ஆனால் அமெரிக்கா இரஷ்யாவின் வாக்குறுதியை நம்ப மறுக்கிறது. இதைப்பற்றி அன்பர் ஆச்சாரியார் **ஜனவரி 31-ந்தேதி ஸ்வராஜ்யா** இதழில் எழுதும்பொழுது சர்வதேச உடன்பாட்டிற்கு முதன் முதலில் எதிரியின் வாக்குறுதியை நம்பும் தைரியம் தேவை எனக் குறிப்பிடுகிறார். ஆனால் கடந்த கால இரஷ்யாவின் வாக்குறுதி வரலாற்றைச் சற்றுத் திரும்பிப் பார்த்தால் அமெரிக்கா சொல்வதில் பெரும் உண்மை இருக்கிறது என்பதை நீதியின்மேல் நம்பிக்கை உள்ளோர் உணர்வர்.

சர்வதேச உடன்பாடுகளையும் தன்னுடைய வாக்குறுதிகளையும் இரஷ்யா எவ்வளவு தூரம் பின்பற்றியிருக்கிறது என்பதை வரலாற்றின் எடுகள் மூலம் சற்றுப் புரட்டிப் பார்ப்போம்.

★ ஜார் சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பிறகு காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் நடுவில் உள்ள இரஷ்யாவிற்குச் சொந்தமில்லாத உக்ரெயின், ஜியார்ஜியா (Ukraine and Georgia) என்ற இரு நாடுகள் சுதந்திர நாடுகளாக அங்கீகாரம் செய்யப்பட்டன. மாஸ்கோவும் 1920-ம் ஆண்டு அதை ஆமோதித்தது. ஆனால் 1921-ம் ஆண்டு வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்டு ஜியார்ஜியாவின் மீது படையெடுத்து அங்கு உள்ள ஜனநாயக அரசாங்கத்தை முறியடித்து ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து இரஷ்யாவுடன் இணைத்துக்கொண்டது. அதேபோல் 1922-ம் ஆண்டு உக்ரெயின் பகுதியும் இரஷ்யாவின் வெறித் தாக்குதலுக்கு ஆளானது.

★ சீனா 1924-ம் ஆண்டு சோவியத் **அரசாங்கத்தை அங்கீகரித்தது.** மாஸ்கோவும் தன்னுடைய படைகளை மங்கோலியாப் பகுதியிலிருந்து வெளியேற்றுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, பிறகு படைகளை வெளியேற்ற மாட்டேன் என அறிவித்துவிட்டது. அதுமட்டுமில்லாமல் 1936-ம் ஆண்டு மங்கோலியா ஒரு கம்யூனிஸ்ட் அடிமை நாடாகவும் ஆக்கப்பட்டுவிட்டது.

★ 1928-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந்தேதி நடந்த கெல்லக் பிரைண்ட் உடன்படிக்கையில் (Kellogg Briand Pact) அந்நிய நாடுகளின் மீது ஆக்ரமிப்பு யுத்தத்தை இரஷ்யா கண்டித்து யுத்தத்திற்கு எதிராக முழக்கமிட்டது. ஆனால் அடுத்த ஆண்டில் மஞ்சூரியா மீது இரஷ்யா படையெடுத்து சீனக் கிழக்கித்திய ரயில்வேயை (Chinese Eastern Railway) கைப்பற்றிக்கொண்டது.

★ லீக் ஆப் நேஷனில் ஒரு உறுப்பினராக 1934-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரஷ்யா சேர்ந்து அந்த அமைப்பின் உன்னதக் கொள்கையான அந்நியர்மீது ஆக்ரமிப்பு நடத்துவது கூடாது என்பதை மனதார ஒத்துக் கொண்டது. ஆனால் ஒப்பந்தத்தை மீறி 1939-ம் ஆண்டு நவம்பர் மாதம் பின்லண்டின் (Finland) மீது படையெடுத்தது. அதன் விளைவாக லீகில் இருந்த அங்கத்தினர் பதவி பறி போய்விட்டது.

★ 1920-ம் ஆண்டு போலந்து மீது படையெடுத்துத் தோல்வி கண்டது இரஷ்யா. 1921-ம் ஆண்டு நடந்த சமாதான உடன்படிக்கையின்படி போலந்து ஒரு சுதந்திர நாடு என்பதை இரஷ்யா ஒப்புக்கொண்டது. போலந்து-இரஷ்ய எல்லைகளும் வகுக்கப்பட்டன. ஆனால் அந்த சமாதான ஒப்பந்தத்தை மீறி இரஷ்யா மீண்டும் 1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் போலந்து மீது படையெடுத்தது. போலந்தை நசுக்கி அதைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்று இரகசியமாக ஹிட்லருடன் ஒப்பந்தமும் செய்துகொண்டது இரஷ்யா. ஒரு பக்கம் சமாதான உடன்படிக்கை மற்றொரு பக்கம் நயவஞ்சக ஒப்பந்தம்.

★ ஜெர்மானியர்கள் இரஷ்யாவைத் தாக்கிய பிறகு மாஸ்கோ போலந்து அரசாங்கத்தை ஆதரித்து ஒத்துக் கொண்டதாக அறிக்கை விட்டது. அந்த அரசாங்கத்தின் தலைவர் சிகார்ஸ்கி. இரஷ்யாவும் போலந்தும் பரஸ்பர உதவி செய்வதாக உடன்படிக்கை வேறு செய்துகொண்டன. 1943-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரஷ்யா உடன்படிக்கையை மீறி சிகார்ஸ்கி அரசாங்கத்திற்கு எதிராக வேலை செய்து கம்யூனிஸ்ட் ஏஜண்டுகள் சிலரை அரசாங்கம் அமைக்குமாறு தூண்டிவிட்டு அதை அங்கீகாரம் செய்தது. 1945-ம் ஆண்டு பெப்ருவரியில் நடந்த யால்டா மாநாட்டில் கூடிய சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் முதலியவர்கள் போலந்தில் பலாத்காரமில்லாத, இரத்தம் சிந்தாத வாக்கெடுப்பு முறையின் மூலம் போலந்து மக்கள் தங்கள் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று அறிவித்தனர். ஆனால் 1947-ம் ஆண்டு நடந்த தேர்தலில் கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுக்கு எதிராக எத்தகைய பயமுறுத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் நடந்தன என்பதை உலகமே அறியும்.

★ 1942-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த ஆங்கிலோ சோவியத் இராணியன் உடன்படிக்கைப்படி எல்லா நேச நாடுகளின் படைகளும் ஆறு மாதத்திற்குள் இரானிலிருந்து வெளியேற வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது, உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்ட இரஷ்யாவோ காலம் கடந்தும் இரானிலிருந்து வெளியேற மறுத்ததுமட்டுமல்லாமல் அங்கு ஒரு கம்யூனிஸ அரசாங்கத்தை அமைக்க முயற்சி செய்தது. ஆனால் பிறகு ஐக்ய நாட்டுச் சபையின் நடவடிக்கையினால் இரஷ்யா வெளியேறியது.

★ ஹிட்லருடைய போர் வெறிக்கு முதலில் இலக்கான நாடு ஆஸ்டிரியா என்பதால் அது சுதந்திர ஜனநாயக

— 5-ம் பக்கம் —

★ அனைத்தும் காற்றில் பறவாதோ! ★

மாணவர்கள் இருவர் குதிரை மீதேறிப் பள்ளிக்குச் செல்கிறார்கள். அவர்கள் செல்லும் வழி நிறைய பனி உறைந்திருக்கிறது! இருவர் மனதிலும் ஓர் எண்ணம் எழுகிறது! பள்ளி செல்லாமலிருப்பதற்குத் தகுந்த காரணமென மனதில் தோன்றிய கருத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு மன ஆறுதலுடன் இல்லம் வருகிறார்கள்! தந்தையிடம் வந்து பாதையெங்கும் பனி நீக்கமற நிறைந்து உறைந்திருப்பதால் பள்ளிக்குச் செல்வதற்கு வழி இல்லை என்கிறார்கள்! "நீங்கள் கூறுவதுபோல் பாதையில் பனி உறைந்து செல்லமுடியாமல் இருந்தால் திரும்ப வந்துவிடுங்கள். அந்தப் பொறுப்பை உங்களிடமே விட்டுவிடுகிறேன். உண்மையோடு நடந்துகொள்ளுங்கள். போக முயற்சி செய்து பாருங்கள்" என்று தந்தை கூறி வழி அனுப்பி வைக்கிறார்! இருவரும் செல்கின்றனர். "வில்லியம் நாம் திரும்ப வீட்டிற்குப் போவது நல்லதல்ல. தந்தை பொறுப்பை நம்மிடமே விட்டுவிட்டதால் நாம் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும்" என்று கூறித் தம்பியைப் பள்ளிக்கு அழைத்துச் செல்கின்றான்!

ஒரு நாள் இரவு நயில் நதியின் முகத்துவாரத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர் நடந்துகொண்டிருந்தது! எங்கும் ஒரே இருள்! எதிரே இருக்கும் கப்பல்கூடத் தெரியவில்லை! வீரர்களின் கரங்களிலுள்ள துப்பாக்கிகளிலிருந்து வெளிவரும் தோட்டாக்களின் மின்னல் ஒளியும் பயங்கரமான ஒலியும் தவிர எதுவுமே தெரியவில்லை! வெற்றி யாருக்கு என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத இருள்சூழ்ந்த நிலை! இரவு எட்டரை மணிக்கு ஒரு குண்டு தளபதியின் தலையில் தாக்க அவர் கீழே விழுந்தார்! சிகிச்சை செய்யும் பொருட்டுக் கப்பலின் கீழ்த்தட்டிற்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். அந்த நேரத்தில் காயம்பட்ட மற்றொரு வீரனுக்கு சிகிச்சை நடந்துகொண்டிருக்கிறது. தளபதியின் நிலையை அறிந்த மருத்துவன் முதலில் காயம்பட்ட வீரனுக்குச் செய்துகொண்டிருந்த சிகிச்சையை நிறுத்திவிட்டுத் தளபதிக்கு மருத்துவம் செய்ய வந்தான். பேசமுடியாத நிலையில் இருந்த தளபதி "இல்லை! இல்லை! எனக்குமுன் காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தபின் என்னைப் பார்த்தால் போதும்" என மெதுவாகச் சொல்லி மறுத்துவிட்டார்.

ஒரு போரிலே மூன்று முறை அந்தத் தளபதியின் உயிர் உடலை விட்டு நீங்கவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. அந்த நேரங்களில் எல்லாம் அருகிலிருந்த போர்வீரன் தளபதியை நோக்கிவரும் குண்டுகளை, தளபதியின்மேல் விழாமல் தான் அக்குண்டினைத் தாங்கிக்கொள்ளும் பொருட்டு அதற்கு நேராகச் சென்றான்! வந்த குண்டு தரையில் விழுந்து தாக்க, மணலும் கல்லும் அவருடைய கண்ணிலே விழுந்ததால் ஒரு கண் குருடாய்விட்டது! போர் நடந்துகொண்டிருக்கும்போது செய்தியைக் கூறினால் படையிலுள்ளவர்கள் மனம் கலங்கிவிடுவார்கள் என எண்ணிச் செய்தியை வெளியிடாமல் இருந்தார். இறுதியில் ஒரு கண் குருடாகப் போயிற்று!

இளமையிலேயே பள்ளிக்குச் செல்லும் பருவத்திலேயே "தந்தை பொறுப்பைத் தன்னிடத்திலே கொடுத்துவிட்டார், நாம் பொய் சொல்லக்கூடாது" எனத் தம்பிக்கு அறிவுரை கூறி அழைத்துச் சென்ற அவன் தான் வாலிபப்பருவத்தில் பொறுப்பை உணர்ந்து நடந்ததால் மிகப் பெரிய தளபதியாக—வீரனாக விளங்கினான்! போர்க்களத்திலே அவர்மேல் பாய வந்த குண்டை அருகிலிருக்கும் வீரன் "தளபதியின்மேல் விழக்கூடாது அவர் வாழவேண்டும்" என்ற எண்ணத்திலேதான் அக்குண்டிற்குமுன் பாய்ந்து மார்பைக் காட்டுகிறான் என்றால் அந்தத் தளபதியின்மேல் அவ்வீரர்களுக்கு எத்தகைய குடும்ப பாசம் — பற்று இருக்கவேண்டும்! துப்பாக்கிக் குண்டு தாக்கித் தான் வீழ்ந்த நிலையிலும் தன்னைப் பிறகு கவனிக்கலாம், தனக்குமுன் வீழ்ந்த வீரர்களை கவனியுங்கள் எனக் கூறிய அந்தத் தளபதி யார்? உலகம் புகழ வாழ்ந்த வீரன் நெப்போலியன் படையுடன் புறப்பட்டுவிட்டான் என்ற செய்தியறிந்த உலக நாடுகள் அனைத்தும் அஞ்சியிருந்த நிலையில் அவன் எங்குச் சென்றான் என்பதை அறிவதற்காகக் கடலிலே கலத்துடன் அஞ்சாமல் சென்ற கடமைவீரன்தான் அவன்!

மாவீரன் நெப்போலியன் 1798-ம் வருடம் மேத் திங்கள் பிரான்சுநாட்டிலிருந்து படையெடுத்துப் புறப்பட்டுவிட்டான் என்ற செய்தி அவனியெங்கும் பரவியது! அவன் எங்குச் சென்றான் என்பது பிரான்சு நாட்டிலுள்ள அவனது நிர்வாகிகளைத் தவிர வேறுஎவருக்கும் தெரியாது. இந்தியாவின் செழிப்பைக் கேட்டுச் சென்றுள்ளான் என்றும், சூயஸ் கால்வாயை வெட்டச் சென்றான் என்று சிலரும், இங்கிலாந்தின்மீது படையெடுத்துச் சென்றுள்ளான் என்று பலரும் பற்பல விதமாக கூறி வந்தார்கள்! பல்வேறு நாட்டினர் எந்த நேரம் தங்கள் நாட்டிற்கு நெப்போலியனால் இன்னல் ஏற்படுமோ என்ற அச்சத்தோடு வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இங்கிலாந்து தன் கப்பற் படையின் தலைவனிடம் நெப்போலியனைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை அளித்தது! அவன் சிறந்த போர்வல்லுநன். எகிப்தின் அபேகூர்குடாவில் நெப்போலியனைக் கண்டு, பிரெஞ்சுக் கப்பல்களை வளைத்து வெஞ்சமர் புரிந்து உலகம் அஞ்சிய மாவீரனை முறியடித்து அவன் ஆருயிர் நண்பனும் அக்கப்பற்படைத் தலைவனுமான புரூயிஸைக் கொன்ற அந்த இங்கிலாந்தின் கப்பற் படைத் தலைவன் தான் நெல்சன்!

இங்கிலாந்தில் நார்பக் மாவட்டத்தில் பர்ன்ஹாம்தோர்ப் என்ற கிராமத்தில் 1758-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ல் பிறந்தார். அவர் தந்தை பாதிரியார். இவர் சிறுகுறும்பு செய்து ஓடி விளையாடித் திரியும் இளமையான ஒன்பதாவது வயதிலேயே தாய் காலஞ் சென்றனள். நார்விச்சிலே இருந்த பள்ளியில் முதலில் சேர்ந்து, பின் நார்த்வால்ஷாம் பள்ளிக்குச் சென்று பயின்று வந்தார். இளமையிலே கப்பலில் வேலை பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகம் உடையவராக இருந்ததால் தனது சிறிய தந்தை மாரிஸ் உதவியால் அவர் வேலை பார்த்த கப்பலுக்கே வேலைக்குச் சென்றார். அக்கப்பல் போக வழியில்லாத நிலையில் இருந்ததால் வெஸ்ட் இன்டீசுக்குப் போகும் கப்பலில் வேலை வாங்கிக் கொடுத்தார். நெல்சன் வேலையை ஒப்புக்கொள்ளும் பொழுது பனிரண்டு வயதுச்சிறுவன்.

நெல்சன் கப்பல் தலைவனிடமும் மற்றைய அலுவலர்களிடமும் மிக்க அன்புடையவராக இருந்தார். தனது இருபத்தோராவது வயதில் கப்பலுக்குத் தலைவனாக நியமிக்கப்பெற்றார். கப்பலில் இவரது திறமையைக் கண்டபின் போர்க்கப்பலுக்குத் தலைவனாக நியமித்தார்கள். அந்த நேரத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர் நடந்துகொண்டிருந்தது. கார்சிகா தீவில் பாஸ்டியா நகரில் பிரெஞ்சுக்காரர்களின் படைகள் தங்கி இருப்பதாக அறிந்து, ஆங்கிலேயர்கள் அங்குச் சென்றார்கள். ஆங்கிலப் படையின் பிரதம அதிகாரியாயிருந்த லார்ட் ஊட், பிரெஞ்சுப் படையைத் தாக்கும்படி உத்தரவிட்டார் எண்ணிக்கையில் மிகுதியான பிரெஞ்சுப்படையினரை முறியடிக்க முடியாதென்று மறுத்துவிட்டார்கள் ஏனைய உதவித் தலைவர்கள். நெல்சன் தன் பொறுப்பிலிருந்த 1200 வீரர்களுக்கு வீரமொழிகள் பல கூறி 4000 பிரெஞ்சு வீரர்களை முறியடித்து பாஸ்டியா நகரைக் கைப்பற்றினார்!

பிரெஞ்சுக்காரருக்கு உதவி புரிய வந்த ஸ்பெயின் நாட்டோடு போர் நடந்துகொண்டிருந்தது. எங்கும் காரிருள் சூழ்ந்த இரவு நேரம். எதிரிகளின் கண்களுக்குத் தெரியாமல் கப்பலிலிருந்து கரை செல்லும் முயற்சியில் முயன்றனர். கரையோரமாகச் சென்றுகொண்டிருந்தபோது அதை எப்படியோ அறிந்த ஸ்பெயின் படையினர் ஆங்கிலப் படையை எதிர்த்துத் தாக்கினார்கள். நெல்சன் தன் படையினரைப் பின்வாங்கும்படி கட்டளையிடும் நேரத்தில் இவரது வலது முழங்கையில் குண்டு வந்து தாக்க, "எனது கையிலே குண்டு தாக்கிற்று; நான் பிழைக்கமாட்டேன்" என்று கத்திவிட்டார். அவருடைய மருமகனாகிய நெஸ்பிட் சத்தத்தைக் கேட்டு வந்து அவரைத் தூக்கிக்கொண்டு போய் வேண்டிய வைத்திய முறைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அந்த நேரத்திலும் போர் முறையைப் பார்க்க வேண்டும் என்று தன்னை நிமிர்த்தி உட்கார வைக்கும்படிச் சொன்னார். அப்பொழுது மற்றொரு கப்பல் எதிரிகளின குண்டு வீச்சால் தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருந்தது! நெல்சன் தன் கை வேதனையைப் பார்க்காது ஒரு கையால் உதவி செய்து பலரைக் காப்பாற்றினார் இதனால் இவருக்குக் கை வேதனை அதிகமாகியது. ஒரு கையைக் கத்தரித்து எடுத்தும் உடல் நிலை சரியில்லாததால் இங்கிலாந்து சென்று வீட்டில் இருக்க நேரிட்டது!

நெல்சன் நீண்ட நாட்கள் வீட்டில் தங்க முடியவில்லை. ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் மத்திய தரைக் கடலில் போர் நடந்து ஒரு ஆங்கிலத் தளகர்த்தர் முறியடிக்கப்பட்டதால் இங்கிலாந்து மக்கள் நெல்சன் போய்ப் போர் செய்து தங்கள் நாட்டின் மானத்தைக் காக்க வேண்டுமென முறையிட்டார்கள். நெல்சனும் மக்கள் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக்கொண்டு இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார். அவர் புறப்படும்பொழுதே 'வெற்றி' என்ற கப்பலில் புறப்பட்டுச் சென்றார். வழியில் வெள்ளம்போல் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றுவாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார்கள். 1805-ம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ம் நாள் காடிசுக்கு வந்தார். எதிரிகள் இருப்பிடத்தை அறியும் வரை அங்கேயே தங்குவதாக முடிவு செய்தார். பிரெஞ்சுப் போர்க் கப்பல்கள் டிராவல்கர் முனைக்கு அருகில் இருக்கின்றன என்று தெரிந்ததும் அக்டோபர் திங்கள் 21-ம் நாள் அங்குச் சென்று போரைத் துவக்கினார். நெல்சனும் காலிங்வுட் என்பவரும் போர்க் கப்பல்களை இரண்டு வரிசைகளாப் பிரித்து பிரெஞ்சுக் கப்பல்களைத் தாக்கினார்கள். இவர்களது போர் முறை பிரெஞ்சுக்காரர்களுக்குப் புதிராகவே இருந்தது. மலையும் மலையும் மோதுவதுபோல் களிறும் களிறும் பிளிறுவதுபோல் போர் நடந்தது.

கப்பலின் மேல் தளத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நெல்சன் மீது குண்டு பாய்ந்தது! அருகிலிருந்த கப்பல் தலைவனான ஹார்டி அவரை கைத்தாங்கலாக கப்பலின் உள்ளறைக்குக்கொண்டுவந்து மருத்துவ முறைகளைச் செய்ய ஏற்பாடு செய்தார். அந்நிலையில் நெல்சன் "ஹார்டி நான் குண்டடிபட்டது போர்வீரர்களுக்குத் தெரியக்கூடாது, இதுவே என் இறுதிப் போராக இருக்குமென எண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே போரின் நிலைமைகளை அறிந்து வரச் சொன்னார். ஒரு மணி நேரம் கழித்து வந்து ஹார்டி மயக்கத்துடன் இருந்த நெல்சனது கையைக் குலுக்கி வெற்றி அடைந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறிவிட்டுச் சென்றார். போர் முடிந்து அனைவரும் திரும்பி வந்து பார்த்தபொழுது நெல்சன் இறந்துவிட்டார்! இறக்கும் தறுவாயில் இருந்தபோதும் வெற்றிச் செய்தியைக் கேட்டபின்தான் இறக்க வேண்டும் என்று இருந்த அந்த அஞ்சா நெஞ்சனை — காரியமற்றும் கடமை வீரனைப் புகழ்ந்தார்கள்! வெற்றியடைந்த மகிழ்ச்சியைக் குதூகலமாகக் கொண்டாட இருந்த இங்கிலாந்து மக்கள் நெல்சன் இறந்த துயர் தாங்காது துக்கத்தில் ஆழ்ந்தார்கள்!

—முகவை மு. பாண்டியன்

4. அறுசீர் விருத்தம்.

அனல்கக்கும் இருவிழியும் அதிர்ந்தெழும்பும்
பெருங்குரலும் அஞ்சா நெஞ்சும்

முடிவு தேதி: 21-3-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

காண்ட்ராக்டர் கண்ணாயிரம்

லாரிகள் வந்து போய்க்கொண்டிருந்தன. ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சரளைக்கற்கள் ஒரு இடத்தில் குவிந்தன. லாரியிலிருந்து வந்திறங்கிய செங்கற்கள் ரஸ்தாவில் இப்பக்கமும் அப்பக்கமும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டன. பார வண்டிகளில் ஏற்றப்பட்டுவந்த மணலும், சுண்ணும்பும் ஒவ்வொரு இடத்தில் குவித்து வைக்கப்பட்டன. வீடு கட்டும் மேஸ்திரிகள், கொல்லத்துக்காரர்கள், தச்சர்கள், சித்தாள்கள் ஆகிய அனைவரும் தத்தம் வேலையை மும்முரமாகச் செய்துகொண்டிருந்தார்கள். வேலை சரியாக நடக்கிறதா இல்லையா என்பதை மேற்பார்வையிட லாரியிலிருந்து வந்திறங்கினார் காண்ட்ராக்டர் கண்ணாயிரம்.

சென்னை மைலாப்பூருக்கு அருகாமையில் இருக்கும் ராஜா அண்ணாமலைபுரத்திற்கு அருகில் ஒரு 'புரம்' எழும்பிக்கொண்டிருந்தது புதிதாக! அங்கு முன்னர் சுமார் நூறு குடிசைகள் இருந்தன. அவைகளை எல்லாம் ஒழித்து, வேறு இடத்திற்கு விரட்டி விட்டு, இப்பொழுது ஏதோ 'டிரஸ்டு புரமோ,' அல்லது 'ராம புரமோ' ஏதோ ஒரு 'புரம்' எழும்பிக்கொண்டிருந்தது! அவ்விடங்களையெல்லாம் விலைக்கு வாங்கித் தன்னுடைய மேற்பார்வையிலே கட்டடங்கள் கட்டலானார் காண்ட்ராக்டர் கண்ணாயிரம்.

கண்ணாயிரம் மைலாப்பூரில் ஒரு பெரிய புள்ளி பல லகரங்களுக்கு அவரிடம் ஆஸ்திபாஸ்தி இருந்தது. நல்ல கறுத்த மேனி; விரைப்பாக தூக்கி நிற்கும் மீசை; காவிபடிந்த பற்கள்; தடித்த உதடுகள்; கண்களில் எப்பொழுதும் ஒருவிதக் குரூரம்! அவருக்கு மைலாப்பூரிலேயே சொந்த வீடும், காருமிருந்தன. ஆனால், அவ்வளவு திரண்ட சொத்துக்கு ஒரு பிள்ளைகூடக் கிடையாது. அவருடைய மனைவி இளம் வயதிலே சீக்கில் விழுந்துவிட்டாள். எனவே மனிதர் ஒரு 'மாதிரியாக' மாறிவிட்டதில் வியப்பில்லை.

வானத்தை இடிப்பதுபோன்ற நிலையில், பலப்பல பங்களாக்கள், உருவாகிக்கொண்டிருந்தன, அந்த 'புரத்தில்.' ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி. இதில் சிறியது. பெரியது என்ற பாகுபாடும் உண்டு. ஏனெனில் ஒரே மாதிரியாகக் கட்டினால் பணக்காரர்கள் வாங்கமாட்டார்களே! எல்லாவற்றையும் விற்றால் இதில் வேறு கொள்ளை லாபம் அவருக்குக் கிடைக்கும்.

அந்த 'புரத்தில்' வலதுபக்கம் முதல் நான்கு பங்களாக்கள் கட்டி முடிந்துவிட்டன. அடுத்த மாதம் கிரகப் பிரவேசத்திற்குத் தயாராகி விட்டிருந்தன அவைகள். அதில் முதல் பங்களாவில் தாற்காலிகமாகத் தன் காரியாலயத்தை, வைத்திருந்தார் கண்ணாயிரம். அதாவது அவர் அப்பக்கம் வந்தால், உட்கார, படுக்க வசதியுடன் ஒரு சிறு மேஜை, கல்லாப்பெட்டி, மற்றும் பல சாமான்களுடன் அப்பங்களாவை உபயோகித்து வந்தார். கூலியைக் கண்ணாயிரம் தானே நேரில் கொடுப்பார். இல்லாவிட்டால் மேஸ்திரிகள் சாப்பிட்டு விடுவார்கள் என்பது அவருக்குத் தெரியும்

அப்படியிருக்கும் போதுதான் ஒரு நாள் மேஸ்திரியுடன் அஞ்சலை அவருடைய காரியாலய அறையினுள் நுழைந்தாள். அவளைப் பார்த்தவுடன் சொக்கிப்போனார் கண்ணாயிரம்.

அஞ்சலை பார்ப்பதற்கு கறுப்பாக இருந்தாலும் நல்ல கொழு கொழுப்புடன் இருந்தாள். முகத்தில் தனிக்களை வீசிற்று. வட்டமான முகம்; சாந்தம்தவழும் கண்கள்; பவளவாய்; முகத்தில் எப்போதும் சிரிப்பு; நெடிதுயர்ந்த மார்பகம்; கழுத்தில் மஞ்சள் கயிறு. அவள் இதற்குமுன்பு ஏதோ ஒரு கிராமத்தில் இருந்தாளாம். விளைச்சல் காணவில்லை. அவள் கணவனுக்கு வேலை போய்விட்டதால், அவன் சென்னைக்கு வந்துவிட்டு 'மிலிட்டரியில்' சேர்ந்து பங்களூருக்குப் போய்விட்டானும். தான் வீட்டில் சும்மாயிருப்பதை விரும்பாமல், அவளும் பட்டினத்திற்கு வந்துவிட்டாள் வேலை செய்ய.

"ம்... உம் பேரு என்னம்மா ?"

"அஞ்சலைங்க...!"

"உம் புருஷன் எங்கேயிருக்கிறான் ? நீ வேலை செய்வதில் அவனுக்கு சம்மதமா ? நான் கொடுக்கிற கூலியைத்தான் நீ வாங்கிக்கொள்ளணும். இதற்கெல்லாம் சம்மதமா ?"

"உங்க இஷ்டப்பிரகாரம் கொடுங்க. என் கணவர் போன மாதந்தாங்க பங்களூரு போனாரு. அவருதாங்க இப்படி எங்களுச்சும் வேலையைப் பாரு. நான் அதுக்குள்ளாற சம்பாதிச்சு பணம் அனுப்பறேன்னார். நீங்கதான் எப்படியாவது எனக்கு ஒரு வேலை..."

"சரி சரி! மேஸ்திரி, இவளை இன்னி முதல் உங்கிட்டே சித்தாளா வைச்சுக்கோ! ஒரு ரூபாய் கூலி கொடு. போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம். என்னம்மா ?"

"சரிதாங்க !"

அஞ்சலை வேலைக்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதமாகிவிட்டது. வேலையையும் மிக நன்றாகவே செய்தாள். கூலியும் உயர்த்தப்பட்டது. அஞ்சலை எல்லோருடைய அன்பையும் பெற்றுவிட்டாள். மிகவும் வெகுளி. யார் எதைச் சொன்னாலும் நம்பிவிடுவாள்.

காண்ட்ராக்டர் கண்ணாயிரத்தையும் அவள் அப்படியே நம்பிவிட்டாள். அவர் மிக நல்வர்; ஈவு இரக்கமுள்ளவர்; தன் தொழிலாளர்களுடன் தாராளமாகப் பழகும் பெரிய மனத்துக்காரர் என்றெல்லாம் நம்பிவிட்டாள். அடிக்கடித் தன் காரியாலயத்திற்கு அவளைக் கூப்பிட்டனுப்புவார் கண்ணாயிரம். அவளும் விஷயம் தெரியாமல் போவாள். ஆனால் கண்ணாயிரத்தின் உள்ளத்தை அவளறியவில்லை. அழகிய அஞ்சலையின் மதமதப்பான உடல் அவர் கனவில்கூடத் தோன்றிச் சித்திரவதை செய்தது. அவளை எப்பொழுது அடையலாம், எப்படி அடையலாம் என்பதிலேயே அவருடைய கவனமெல்லாம் இருந்தது. பலப்பல முறைகளைக் கையாண்டார். அவை எல்லாம் பலிக்கவில்லை. கூலி கொடுக்கும் சாக்கில் அவள் கையை அழுத்துவார். அவள் சிரித்துக்கொண்டே போய்விடுவாள்.

ஒரு சமயம் தன் வீட்டிற்கு, மனைவிக்கு ஒத்தாசை செய்யணும் என்று சொல்லி அஞ்சலையை வரச் செய்தார். அவளை ரொம்ப உபசரித்தார். இதையெல்லாம் அவள் தன்னை அடையத்தான் சூழ்ச்சி செய்கிறார் என்பதை அறிந்தாளில்லை. அவள் மனம் வெள்ளை மனம்; கபடமில்லாதது. பிறரையும் அப்படி நம்பினாள். அன்று அவர் ஆசையுடன் கையைப் பிடித்து இழுத்ததற்கு 'என்னங்க விளையாடுறீங்க ?' என்று அவரை உதறித்தள்ளி ஓடிவிட்டாள். அவளைப் பிடித்து நுகரவேண்டும் என்று பின்னாலேயே ஓடின கண்ணாயிரத்தைத் தடுத்தது அவருடைய மனைவியின் கை. அவள் அந்த அறைக்குள் வந்திராவிட்டால்...

ஒருநாள் அவளை சினிமாவுக்கு அழைத்தார் கண்ணாயிரம். அஞ்சலை இதைக் கேட்டுத் திகைத்தாள்.

"நானாவது, உங்களுடன் சினிமாவுக்கு வர்றதாவது ? அதெல்லாம் ஆகாத காரியங்க !"

"அட சும்மா வா ! நான் அழைத்துப் போறேன்."

"அதெல்லாம் நான் வரமாட்டேனுங்க ! உங்களுடன் நானா வருவது ?"

"நீ வரமாட்டே? நீ நாளையிலிருந்து வேலைக்கு வரவேண்டாம் !"

அவள் நடுநடுங்கி விட்டாள். கண்ணாயிரம் அவ்வளவு கோபத்துடன் பேசினதை அவள் இதுவரைக்கும் பார்த்ததில்லை.

"என்னங்க நீங்க இப்படி...ஒரேயடியா..."

"சரி சரி...நீ வருகிறாயா இல்லையா அதைச் சொல்லிவிடு !"

"நான் உங்களுடன் காரில் வரமாட்டேனுங்க. நான் நடந்து வர்றேன..."

"அப்படி வா வழிக்கு ! நான் கபாலி டாக்கீஸ் கிட்டே இருக்கேன். நீ சீக்கிரம் வா !"

★

அவர் காரில் பறந்தார். அவர் உள்ளம் ஆனந்தத்தினால் துடித்தது. 'இன்று எப்படியும் பறவை தன்னிடம் சிக்கிவிடும்' என்கிற சந்தோஷத்தில் அவர் தியேட்டருக்குப் போய் உயர்ந்த வகுப்பு டிக்கட் இரண்டு வாங்கினார்.

சொல்லி வைத்ததுபோல் அஞ்சலை நன்றாக அலங்கரித்துக்கொண்டு வந்திருந்தாள். அப்பொழுது தியேட்டரில் படம் ஆரம்பித்துவிட்டிருந்ததால் வாசலில் ஒருவருமில்லை.

'வந்தூட்டியா அஞ்சலை ? உனக்காக நான் எவ்வளவு நேரங் காத்திருப்பது ? வா வா சோபாவில்போய் உட்காரலாம்" என்று அவள் கையைப் பிடித்தார்.

"ஐயையோ ! என்னங்க நீங்க... நான் சோபாவுக்கும் வரலை... ஒண்ணுக்கும் வரலை...எனக்கு கிராமத்திலே தரை டிக்கட்டிலே படம் பார்த்துதான் வழக்கம். நான் தரை டிக்கட்டுக்கே போறேங்க...!"

"உனக்காக நான் இரண்டு டிக்கட் வாங்கியாச்சு ! இங்கே வந்து உன் சங்காத்தம் பண்ணாதே ! அப்புறம் எனக்கு கோபம் வந்தால்..." என்று அவளை இழுத்தார்.

"என்ன கண்ணாயிரம் எங்கே... இப்படி...?" என்ற குரலைக் கேட்டு 'சட்'டென்று அஞ்சலையின் கையை உதறினார் கண்ணாயிரம்.

"ஓஹோ...துரைசாமியா... இப்படி படத்துக்கு வந்தேன்..."

"அப்படியா? நானும் படத்துக்குத் தான் போறேன்...இது யாரு 'குட்டி'? புதுசா இருக்கே..."

அஞ்சலை இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாள். அவள் மனம் பற்றி எரிந்தது. கண்ணாயிரம் தன்னை சினிமாவுக்குக் கூப்பிட்டது இதற்குத்தானா .... அப்படியானால்...... கண்ணாயிரம்... அப்படிப்பட்டவரா...சீ...!

"சரி நீ வீட்டிற்கு போ அஞ்சலை!" என்று கண்ணாயிரம் சொல்வதற்கு முன்பே அவள் சிட்டாகப் பறந்து விட்டாள்.

★

"யாரது அஞ்சலையா ? என்ன விஷயம் ?"

"வந்து வந்து..."

"என்ன சொல்லு ?"

"நான்.. நான்...இனிமே வேலைக்கு வரலேங்க...

"ஏன்...என்ன நடந்தது..."

"ஒண்ணுமில்லேங்க...உடம்பு சரியில்லே..."

"அதனால் என்ன ? இன்னும் ஒரு வாரம் பொறுத்து வாயேன்..." கண்ணாயிரம் அவளைக் கடித்துவிடுவதுபோலப் பார்த்தார். நேற்று இரவு தியேட்டரில் நடந்த சம்பவம் அவர் மனச்சாட்சியைக் குத்தியது.

"இல்லேங்க... எனக்கு...... மூனு மாசமாயிருக்கு...அவருக்கு வீடும் அங்குக் கிடைத்துவிட்டதாம். என்னையும் உடனே புறப்பட்டு வந்துவிடும்படி எழுதியிருக்கிறார். நான் இன்னிக்கே போறேன். நான் வர்றேனுங்க...!"

"அஞ்சலை... அஞ்சலை... வாயும் வயிறுமாக இருக்கும் உன்னையா நான் கசக்க நினைத்தேன். ஐயோ... எவ்வளவு பெரிய தவறு..!" என்று அலறினார். அவர் அலறுவதற்கு முன்பே அஞ்சலை அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள். தூரத்தில் அஞ்சலை போவதைப் பார்த்து இரு சொட்டு நீர் கண்ணிலிருந்து வழிந்தவாறே நின்றுவிட்டார் காண்ட்ராக்டர் கண்ணாயிரம்!

—பி. ஆர். இராசாராம்

திரைகடல் அடக்கினர்!

மனித குல வரலாற்றிலே முதல் கப்பல் கட்டிப் பெருமை பெற்ருன் தமிழன்! அதை இந்துப் பெருங்கடலில் மிதக்கவிட்டு அகமகிழ்ந்தான்!

கிரேக்க நாட்டு வீதிகளில் தமிழகத்து வணிக வேந்தர்கள் பவனி வந்தார்கள்; ரோம நாட்டு அந்தப்புறங்களில் தாயகத்துப் புகழ் பாடினுர்கள்.

அவர்கள் கலம் மிதந்து வாணிபம் நடாத்திய நாடுகள்-எகிப்து, சீனு, பாபிலோனிலா, அலக்சாண்டிரியா, சால்டியா, அசிரியா, சுமத்ரா, இலங்கை, மலாயா, சாவா-இன்னும் பிற.

முசிறி, கொற்கை, புகார், காரைக்கால், ஆளுடையார்பட்டினம், கோட்டைப்பட்டினம், தேவிப்பட்டினம், தூத்துக்குடி, காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், தொண்டி முதலிய துறைமுகப் பட்டினங்களிலிருந்து பண்டங்களையும், திராவிடப் பண்பாட்டையும் சுமந்து சென்றன, நாவாய்களும், மரக்கலங்களும், கடல் கடந்த நாடுகளுக்கு.

காவிரிப்பூம்பட்டினத்து, வாணிகச் சிறப்பைக் குறிக்கும் வரலாறு படைத்த வரிகள் :

"வான் முகந்த நீர்
மலைபொழியவும்
மலைபொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியா பலபண்டம்
வரம்பறியாமை வந்திண்டி..."

—பட்டினப்பாலை.

வாணிபம் ஒன்று உண்டு. "ஓபீர்" கடற்பயணம் என்று குறிக்கப்படும், கடற்பயணம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். அப்பொழுது "டார்சிசு"க்கலங்கள், "முசிறி" துறைமுகப்பட்டினத்திலிருந்து யானைத் தந்தம், மயில், குரங்கு, சந்தனம், பொன், வெள்ளி போன்ற வியாபாரப் பொருட்களைப் பெற்றுச் சென்றிருக்கின்றன.

அசிரியா, நாட்டு அரசுக்கு அடிகோலிய முதல் மன்னர் மன்னன் காலத்திலிருந்தே திராவிட நாட்டிலிருந்து, தங்கம், பட்டு, முத்து, மயில், போன்ற வியாபாரப் பொருட்கள் இறக்குமதிச் செய்யப்பட்டிருக்கின்றன. காலம் கி. மு. 14-ம் நூற்ருண்டு. பிரட்டு (Perrot) சிபீசு (Chipiez) போன்ற புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள், அசிரியாநாட்டு அரசர்கள் ஏராளமாகச் செம்பொன் திராவிடத்திலிருந்து இறக்குமதி செய்திருக்கிருர்கள் என்பதற்குச் சான்று பகருகிருர்கள். திராவிடத்துச் சந்தனக் காடுகளில் அலைந்து திரியும் யானைகளை அரசாங்க ஊர்வலங்களுக்காக 'அசிரிய' மன்னனுகிய நான்காம் "சால்மனேசர்" (727-722 கி. மு.) இறக்குமதி செய்திருக்கிருன். மூன்ரும் "நெபுசனேசர்" மன்னர் காலத்தில் அரண்மனையில் கண்டெடுக்கப்பட்ட சந்தனக்கட்டைகள் (604-562 கி. மு.) திராவிடத்து வியாபாரத் தொடர்பைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

பாபிலோனியா நாட்டிற்கு மயில், அரிசி, அகில் போன்ற பொருட்களை இறக்குமதி செய்த பெருமை எங்கள் மன்னன் "அகஸ்டஸ்"வின் அரசவையில் திராவிடத்து அறிஞர்கள் வீற்றிருந்ததாக வரலாறு கூறுகிறது. கிரேக்கத்துப் போர் வீரர்கள் பாண்டிய நாட்டு மன்னர்களுக்கு மெய்க்காப்பாளர்களாக பணியாற்றியிருக்கிருர்கள். மலபார் கடற்கரையில் "பைசாந்தியம்" என்ற கிரேக்கக் குடியேற்றப் பகுதி ஒன்றே இருந்திருக்கிறது. திராவிடத்தை முத்துக்கள் கிடைக்கும் அதிசய நாடு என்று போற்றி வந்தார்கள், கிரேக்கர்கள்

"அர்த்த சாத்திரம்" தந்த "கௌடில்யன்" இவ்வாறு கூறுகிருன்:—

"வடநாட்டு வாணிபத்தைவிடத் தென்னுட்டு வாணிபம் மிகச் சிறந்ததாக அமைந்திருந்தது. ஏனென்ருல் பிறநாடுகளில், பொன்னும் மணியும் பெற்றுத் தரக்கூடிய வியாபாரப் பொருட்களெல்லாம் திராவிடத்தைச் சார்ந்தவைகள். வடஇந்தியா தோல், கம்பளி, குதிரைகள் இவைகளைத்தான் ஏற்றுமதி செய்து வந்தது. ஆனுல் திராவிடமோ, செம்பொன், வைரம், முத்து, அகில், தேக்கு, மயில், குரங்குகள், தாவரப் பொருட்கள், நல்ல மிளகு, அரிசி, முதலிய பொருட்களை ஏற்றுமதி செய்தது"

வடநாட்டு ஆரியர்கள், கடலைக் கடப்பது சமுதாய விரோதம் எனச் சட்டம் வகுத்த காலத்தில் திராவிடர்கள் திரை கடலோடித் திரவியம் தேடினுர்கள்.

உகோசின்-தான் எழுதிய "வேத கால இந்தியா" (பக்கம் 307-ல்) என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிருன்:—

செலவிட்டிருக்கின்றனர்- அவர்கள் கடைக்கண் பார்வையைப் பெறுவதற்காகத் திராவிடத்து முத்துக்களால் கிரேக்கத்து எழிலரசிகள் தங்கள் அங்கங்களை அழகுபடுத்தினுர்கள்.

"கயஸ் கிளாடியஸ்" மன்னனின் பட்டத்தரசியான "லோலா" எப்பொழுதும் மூன்று இலட்சம் 'ஸ்டெர்லிங்' மதிப்புள்ள திராவிடத்து முத்துக்களை அணிந்திருப்பளாம்.

எழிலரசி "கிளியோபாத்ரா" 80,000 ஸ்டெர்லிங் மதிப்புள்ள ஒரே ஒரு முத்தை, சாராயத்தில் ஊற வைத்து அருந்தினுளாம்.

பிளினி என்பான் குறித்து வைத்திருப்பதைப் பாருங்கள்:—

"ரோம நாட்டிலிருந்து, வருடந்தோறும் 20 இலட்சம் ஸ்டெர்லிங் திராவிடத்திற்குச் சென்றுகொண்டிருந்தன..."

கோட்டயம், கலியன்புதூர், பொள்ளாச்சி, கருவூர், வெள்ளாளூர், புதுக்கோட்டை முதலிய இடங்களில் இப்பொழுது கண்டு எடுக்கப்பட்டிருக்கும் ரோம நாட்டுப் பொற் காசுகள் நமக்கு இந்தக் கதையைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

திராவிடத்திற்கும், ஈழத்திற்கும் உள்ள தொடர்பை "மகாவம்சம்" 'ராசாவலி" "ராசரத்னுகரி" முதலிய பண்டைய ஏடுகள் விளக்குகின்றன. கி. மு. ஆருவது நூற்ருண்டில் பாண்டிய நாட்டு இளவரசி ஒருத்தி இலங்கை மன்னன் "விசயனை" மணந்ததாக "இந்தியக் கடற் பயணம்" என்ற நூலில் 'ராதாகுமத் முகர்சி' என்பார் கூறுகிருர். தூத்துக்குடிக்கு அருகிலுள்ள துறைமுகப்பட்டினத்திலிருந்து கப்பல்கள் ஈழத்துக் கடற்கரையை அடைந்தனவாம். யானைகள். குதிரைகள், அரசவைப் பிரதானிகள், கலைஞர்கள், ஆயிரமாயிரம் குடும்பங்கள்—முதலியன "பெண்கொடை"யாகத் திராவிடத்திலிருந்து சென்றிருக்கின்றன.

திரவியம் பெருக்கினர்!

இன்றல்ல; நேற்றல்ல; இற்றைக்கு 4000 வருடங்களுக்கு முன்பு திராவிட நாட்டு வணிகர்கள் "பாபிலோனியா" தேயத்துக் கடற்கரையில் விளையாடினுர்கள். "யூர்" கடற்கரைப் பட்டினத்துப் புதை பொருட்களில் தாயகத்து "மரத்தடிகள்" முதலிடம் பெறுகின்றன. சுமேரியா மன்னர்கள் கப்பல் கட்டுவதற்காக இம்மரத்தடிகளை, பொன்னும் மணியும் விலையாகத் தந்து திராவிட நாட்டிலிருந்து இறக்குமதி செய்தார்கள்.

எகிப்திய நாட்டில், உயிரற்ற உடல்களை. திராவிட நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பல ரகமான பட்டுத் துணிகளால் பொதிந்துதான் கல்லறைக்கு அனுப்புவார்களாம். இந்த வழக்கம் எகிப்திய நாட்டு 18-வது அரச பரம்பரையில் வந்த மன்னர்கள் காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. துணிகளுக்கு நிறம் கொடுப்பதற்காகத் திராவிட நாட்டில் மாத்திரம் கிடைக்கும் ஒருவிதத் தாவரப் பொருளை எகிப்தியர்கள் உபயோகித்திருக்கிருர்கள். பட்டும், மற்றும் பிறவும் இறக்குமதி செய்வதற்காக எகிப்திய நாட்டு வருமானம் முழுவதும் சிலவிடப்பட்டிருக்கிறது. 3462 வருடங்களுக்குமுன் திராவிடத்தின் பொருள் வளம் இது!

கிருத்து பிறப்பதற்கு 900 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த "டேவிட்" என்ற "ஹீப்ரு" மன்னன் திராவிடத்தோடு வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தான் - என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராள இன வணிகருக்குத்தான் உண்டு. கிருத்துவ விவிலிய நூலிற் காணப்படும், இப்பொருட்களைக் குறிக்கப் பயன்படும் சொற்களே திராவிடத்து வணிகத் தொடர்பை விளக்கும் பெற்றி வாய்ந்தன. 'பாபிலோனியா' நாட்டில் திராவிடக் குடியேற்ற நாடுகள் ஏராளமாக இருந்திருக்கின்றன.

கிருத்து, பிறப்பதற்கு 6000 வருடங்களுக்கு முன்பே திராவிடர்கள் மேற்கு ஆசியாவோடு, வியாபாரத் தொடர்புகொண்டிருந்தார்கள்.

கிரேக்க நாட்டு பெருங் கவிஞன் "ஹோமர்" என்பான், திராவிடத்து தங்கத்தையும் விளைபொருட்களையும் பற்றிப் பாடியிருக்கிருன்! மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் கிரேக்கத்திற்குத் தூதுக் குழுவினர்களை அனுப்பியிருக்கிருர்கள்! மன்னர் மன்

"வேத மந்திரங்களைப் படைத்த வகுப்பார், கடலை அறியமாட்டார்கள். அவர்கள் அறிந்ததெல்லாம், பிறர் சொல்லக் கேட்டவைகள் தாம். ஆகையால் அக்காலத்தில் திறம்படக் கடல் வாணிபம் நடத்தியவர்கள் திராவிடர்கள் ஆவர்..."

திராவிடர்கள் ரோம நாட்டோடு வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்தார்கள். முசிரி-முதலிய துறைமுகப் பட்டினங்களில் ரோம நாட்டு வணிகர்கள் வாழ்ந்து வந்தார்கள். திராவிடத்து வியாபாரப் பொருட்கள், "அலக்சாந்த்ரியா" வழியாக ரோம நாட்டிற்குச் சென்றன. தென்பாண்டிக் கடல் முத்து என்ருல் ரோமாபுரி ராணிகளுக்கு உயிர். அதைத் தேடித் தருவதில் ரோம நாட்டு வீரர்கள் தம் முழு உழைப்பையும்

திராவிட முன்னேற்றக் கழக இலட்சியங்களைத் தாங்கி
மார்ச் 15-ந்தேதி முதல் வெளிவருகிறது!

★ **முன்னேற்றம்** ★

(அரசியல் சமுதாய சீர்திருத்த வார ஏடு.)

ஆசிரியர்: பால்வண்ணன்

தனிப்பிரதி 16 காசுகள். ஆண்டுச் சந்தா ரூ. 8.
ஆறுமாதச் சந்தா ரூ. 4.

எல்லா இடங்களிலும் முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:
முன்னேற்றம், **642, திருவல்லிக்கேணி ஐரோட், சென்னை-5.**

கிருத்து பிறப்பதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்பு திராவிடர்கள் இந்தோசீனுவிற்கு வியாபாரக் கப்பல்களை ஓட்டிச் சென்றிருக்கிருர்கள். பர்மா வழியாக அவர்கள் கலங்கள் இந்தோசீனுவிற்குச் சென்றிருக்கின்றன. அவர்கள் அங்கு வியாபாரப் பட்டினங்களை அமைத்தார்கள்.

'மணிமேகலை' காவியம் திராவிடர்களின் சுமத்ரா, சாவா, மலாயா, நாட்டு வாணிபத்தைக் குறிப்பிடுகிறது. திராவிடத்திற்கும் சீனுவிற்கும், கடல் வழியாகவும், கரை வழியாகவும், வியாபாரம் நடத்ததாக வரலாறு கூறுகிறது.

கிழக்குக் கடற்கரையோரமாக, நெல்லூரிலிருந்து, கடலூர், பாண்டிச்சேரி வரையில் கண்டெடுக்கப்பட்டச் செப்புக்காசுகள் திராவிடர்களின் கடல் வாணிபத்தையும், வெளிநாட்டுத் தொடர்பையும் காட்டுகின்றன.

வரலாறு தரும் விளக்கங்கள் இவைகள்—கிருத்து பிறப்பதற்கு 5000 வருடங்களுக்கு முன்பிருந்து வரலாறு படைத்தவர்கள் திராவிடர்கள். திராவிடத் தோழனே! திண்தோள் வீரனே! திராவிடத்தின் பழம் பெருமை கொணர்ந்திங்கு சேர்ப்பாய்! திராவிடர்கள் இராவிடம்இல்லை யென முரசறைவாய்! முரசறைவாய்!!

—என். சிவம் பி. எஸ்சி,

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 7—3—59 ‖ இதழ் 38

வாழ்க! வளர்க!

தாயின் மணிக்கொடி உயர்கிறது; விடுதலை முரசம் முழங்குகிறது; உரிமைப்பட்டயம் ஒளிவிடுகிறது; உள்ளங்கள் களித்தாடுகின்றன; உலகத்தார் அனைவரும் வாழ்த்தும் ஒலி அலைகள் எதிரொலிக்கின்றன; தடியாட்சிக்கும் முடியாட்சிக்கும் கல்லறை கட்டி விட்டுப் புதுமை நோக்கிச் செல்லும் இளைய உள்ளதார்க்கு இது ஓர் இனிய சேதி! வெற்றி காட்சி!

ஆமாம்! சைப்ரஸ் விடுதலை பெற்றுவிட்டது. கட்டுண்டு, வெள்ளையர் படையால் வெட்டுண்டு, அழிந்திழிந்த அவலச் சரிதைக்கு முடிவு கட்டி விட்டு—புதுமைக் காவியம் தீட்டப் புறப்பட்டுவிட்டது சைப்ரஸ்! அதன் வலிய கைகளைப் பிணைத்துக் கிடந்த கொடிய தளைகள் உடைந்தழிந்தன. நெஞ்சை அழுத்திய அடிமை விலங்குகள் தெறித்துவிட்டன. சிந்தை மகிழும் சேதி! சொந்த அரசு அமைக்கும் சைப்ரசுக்கு, விடுதலைப் படை நடத்தும் நம் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

விடுதலை வெற்றியில் திளைக்கின்ற அன்னார் கன்னங்களில் காய்ந்து தெரிகின்ற கண்ணீர்க் கோடுகள், தழும்பாகிக்கொண்டு வரும் மார்புப் புண்கள், பரங்கியரின் குண்டுக்குப் பலியான விழிகள் முதலியனவும் நமக்குத் தென்படத்தான் செய்கின்றன. எளிதில் கிடைத்ததா இந்த வெற்றி! இல்லவே இல்லை! விடுதலைப் பள்ளுப் பாடும் அன்னார் உடலங்களும், தாயின் மணிக்கொடி ஏந்தி வீழ்ந்த சடலங்களும் நம் கண்ணைவிட்டு மறைந்துவிடவில்லை. இந்த விடுதலைப் போரை நசுக்கிட வெள்ளையர்தான் எத்தனை வழிகளையும் பழிகளையும் கையாண்டனர்.

மாதா கோவிலுக்குள்ளே முடங்கிக் கிடக்காமல், மாதா மண்ணிற்குத் தீதாகும் கேடுகளைக் கண்டிக்கக் கிளம்பினார் மகாரியஸ் பாதிரியார். அவரைக் கொத்தின கழுகு விழிகள். நாடு கடத்தப்பட்டார். நல் வாழ்வு மறுக்கப்பட்டார். என்றாலும் விடுதலை வேட்கை தளரவில்லை.

மற்றொரு தலைவன்—EOKA என்ற அணியை நடத்தியவன்—கர்னல் ஜார்ஜ் கிரிவாஸ் ஆவான். பழிக்குப் பழி; சதைக்குச் சதை என்ற கொள்கை உடையவன். பிரித்தானிய அரசின் பீரங்கிகளுக்கும் டாங்கிகளுக்கும் எதிராகப் படை நடத்தியவன். அவன் தொலைந்தால் தம் ஆட்சிக்குத் தடையில்லை என்பது ஆங்கிலேயர் பகற்கனவு. அவன் பதுங்கி வாழ்ந்தான். அவன் பதுங்கி வாழ்ந்ததைப் பயன்படுத்திக்கொண்டு, "ஜார்ஜ் கிரிவாஸ் இறந்துவிட்டான்! இனி உங்களால் என்ன செய்யமுடியும்?" என்றும் கேட்டனர் பிரித்தானியர். தலைவன் இறந்துவிட்டான் என்றால் நிலை குலைவர் விடுதலைப் படையினர் எனத் தப்புக் கணக்கிட்டனர். உண்மை உணர்ந்த சைப்பிரியரோ முன்னிலும் உணர்வுடன்-வலிவுடன் சண்டையிட்டனர். பகைவர் நினைத்ததுபோல் அன்னார் அணி தளரவுமில்லை; தகரவுமில்லை;

பொருந்தாத பல திட்டங்களைக் காட்டி "ஏற்றுக்கொள்ளுக! இன்றேல் இனியும் தொடர்ந்து சைப்ரசில் ஓலமும் அவலமும்தான் வலம் வரும்!" என்றனர், பிரித்தானியர்.

"சைப்ரசில் உள்ள வெள்ளை கவர்னரின் சபையில் இடம் பெற்று, ஆசையை அடக்கிக்கொள்ளுக!" என்றும் "கருணை" காட்டினார் மாக்மில்லன்.

தொடக்கத்தில் கிரேக்கத்துடன் ஒன்றுபட்ட விடுதலையைக் கேட்ட மகாரியஸ் பாதிரியார், கிரேக்கத்துடன் இணையாவிடினும் தனியாக ஆள்வதையாகிலும்—சைப்பிரியத் துருக்கியரும் சைப்பிரியக் கிரேக்கரும் இணைந்த ஒரு தனியரசு நடத்துவதையாகிலும் அனுமதிக்கச் சொன்னார். வேறு வகை மாற்றத்தை வெறுத்துவிட்டார். இப்போது இம்முறைக்குட்பட்ட விடுதலையைத்தான் இங்கிலாந்து வழங்கியிருக்கிறது.

தம் அன்னை மண்ணை எண்ணம்போல் ஆண்டு வண்ணம் கொழிக்கச் செய்யும் உரிமையைப் பெற்றுவிட்டனர் அங்குள்ளோர். தன்னாட்சி நாடுகளின் பட்டியலிலே மற்றொரு விண்மீன் ஒளிவிடுகிறது. இந்த நல்ல காட்சி என்றும் நிலைக்க வாழ்த்துகிறோம். அந்த வரலாற்றை இங்குள்ள கேளாக் காதினருக்கும் பாடமாக்குகிறோம்.

தன்னாட்சியாம் பொன்னாட்சி அடைந்த சைப்ரசே நீ வாழ்க! வளர்க!

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

நாடாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதை 1943-ல் நடந்த மாஸ்கோ மகாநாடு ஒத்துக்கொண்டது. ஆனால் ஆஸ்திரியா தன்னுடைய சுதந்திரத்தை பெறுவதற்கு யுத்தம் முடிந்து 10 வருடங்கள் காக்க வேண்டியிருந்தது. 1955-ம் ஆண்டுவரை சோவியத் படைகள் ஆஸ்திரியாவை விட்டு வெளியேறவில்லை.

★ 1945-ம் ஆண்டு போலந்தில் உள்ள கம்யூனிசப் படை அதிகாரிகள் (Red army occupation chiefs) நாட்டில் உள்ள ஜனநாயக் கட்சிகளின் தலைவர்களையெல்லாம் அழைத்து அரசாங்கத்துடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் என்று அறிவித்தனர். கம்யூனிச அதிகாரிகள் அந்தத் தலைவர்களின் உயிர்களுக்கு எந்த வித ஆபத்தும் வராது என்று உறுதி எழுதிக் கொடுத்தனர். ஆனால் வழக்கம்போல் உறுதியை காற்றிலே பறக்கவிட்டு சுமார் 16 மக்கள் தலைவர்களை உலகத்திற்குத் தெரியாமல் கொலை செய்தனர். அந்த 16 பேரும் மாஸ்கோவிற்குக் கொண்டு வரப்பட்டு அங்கு குரூரமாகக் கொல்லப்பட்டனர் என்பதை உலகம் பின்பு அறிந்தது.

★ ஹங்கேரி எழுச்சியில் பங்கு கொண்ட ஜெனரல் மாலடெர் போன்ற விடுதலை வீரர்களை சோவியத் இராணுவத் தலைவர்கள் உடன்படிக்கைக்கு அழைத்தனர். அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை என்று உறுதிமொழி அளித்து அழைத்துவிட்டு ஜெனரல் ஐவன் செரவ் என்பவன் தலைமையில் இரஷ்ய இரகசிய போலீசை அனுப்பி விடுதலை வீரர்களைக் கைது செய்தார்கள். அதைத் தொடந்து உறுதிமொழி காற்றிலே பறக்க, விடுதலை வீரர்களைக் கொலை செய்தது சோவியத் அரசாங்கம்.

ஆகவேதான் நாணயத்தையும் நேர்மையையும் காற்றிலே பறக்கவிடும் இரஷ்ய அரசாங்கத்தின் நேர் வாக்குறுதியை எப்படி நம்புவது என்று அமெரிக்கா யோசிக்கிறது. நியாயமான யோசனைதான். ஏனென்றால் துரோகம் செய்வது, சட்டங்களை மீறுவது பொய் சொல்லுவது முதலிய உலக சமுதாயத்தினால் கண்டிக்கப்படும் செயல்களை பின்பற்றுவதில் தவறில்லை என்பது கம்யூனிஸ்ட்களின் சித்தாந்தம். கம்யூனிஸத் தந்தை கார்ல் மார்க்ஸ் சிஷ்யர் லெனினே இப்படி கூறுகிறார். அவர் கூறுவது இதுதான்:

"It is necessary to use any ruse cunning unlawful method evasion concealment of the truth...Promises are like pie-crust made to be broken"

"காற்றிலே பறந்தன பொதுவுடைமையரின் வாக்குறுதிகள்; நட்டாற்றிலே நலிந்தன நம்பினோர் வாழ்வு!" என்பதையே இவை காட்டுகின்றன. அதனால்தான் கூறுகிறோம், "ஆடிய ஆட்டம் அறியோமோ! அனைத்தும் காற்றில் பறவாதோ!" என!

—ஜோசப் பெஸ்கி பி. ஏ.

Statement about ownership and other Particulars about Newspaper
THENRAL

★

1. Place of Publication	...	2/127, Mount Road, Madras-6.
2. Periodicity of Publication	...	Weekly.
3. Printer's Name	...	SP. Arunachalam.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras-6.
4. Publisher's Name	...	SP. Arunachalam.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras 6.
5. Editor's Name	...	Kannadhasan.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras-6.
6. Name and address of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per-cent of the total capital.		SP. Arunachalam, Sole Proprietor, 2/127, Mount Road, Madras-6.

I, SP. Arunachalam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

7—3—59.

SP. ARUNACHALAM,
Signature of Publisher.

‘ஏனம்மா, எதற்காக வேண்டாம் என்கிருய்? வீரத்தேவர் என்றதும் ஏனிந்தப் பதட்டம்?’ என்று கேட்டார் அந்த மனிதர்.

‘ஒன்றுமில்லை. நான் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்துதான் வருகிறேன்’ என்ருள் கண்ணுத்தாள்.

‘பாஞ்சாலங்குறிச்சியிலிருந்தா?’ அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

‘இப்போது நீங்கள் எங்கே போக வேண்டும்?’—இந்தக் கேள்வி கண்ணுத்தாளுக்குச் சிக்கலாக இருந்தது.

‘அவள் எங்கே போகவேண்டும்?’—அது. தெரிந்திருந்தால்தான் அவள் முறையாகவே பயணத்தைத் தொடங்கியிருப்பாளே! அவள் பதில் சொல்லாமல் விழித்தாள். அவர்களும் தாங்கள் யாரென்பதை அவளிடம் அப்போது சொல்லிக்கொள்ளவில்லை. ‘சின்னமருதுவும் அவரது சிறுவயல் நண்பர்களும்தான் அவர்கள்’ என்பது அவளுக்கும் தெரியாது.

சின்னமருது அவளைக் கைத்தாங்கலாக அணைத்தபடி அருகிலிருந்த மண்டபத்தில் கொண்டு வந்து உட்கார வைத்தார். அவளைப் பற்றிய விவரங்களை விசாரிப்பதற்கு முன்னுல், பாஞ்சாலங்குறிச்சி நிலைமைகளைப் பற்றிக் கேட்டார். பாஞ்சையில் கோட்டை கட்டப்படுகிற விவரங்களை உற்சாகத்தோடு கூறினுள் கண்ணுத்தாள். வீரத்தேவனையும் சிங்கத்தேவனையும் பற்றி மிகவும் பெருமையாகப் பேசினுள். ‘அவர்கள் இல்லாவிட்டால் ஊமைத்துரையால் எதுவும் செய்யமுடியாது’ என்றும் கூறினுள். சின்னமருதுவும் வீரத்தேவன் சிவகெங்கைக்கு வந்த கதையை அவளுக்குத் தெரிவித்தார்.

அதிகம் பேசிக்கொண்டேஇருந்தால் ரகசியங்களையும் உளறிவிடுவது மனிதர்களின் வழக்கம். கண்ணுத்தாள் தன் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உளறத் தொடங்கினுள். சின்னமருதுவும் ‘இனி மறைக்கமுடியாது’ என்கிற கட்டத்துக்கு அவளைக் கொண்டுவந்து நிறுத்தினுர். தான் சின்னமருது என்பதையும் அவளுக்குத் தெரிவித்தார். கண்ணுத்தாளுக்கு நம்பிக்கை பிறந்தது. தன் குடும்பச் சிக்கலுக்கு, சின்னமருது பரிகாரம் தேடித் தருவார் என்ற நம்பிக்கையில் முழு நிலைமைகளையும் அவரிடம் தெரிவித்தாள்.

வீரத்தேவனின் கோபத்தைத் தணித்து, சிங்கத்தேவனேடு அவளைச் சேர்த்துவைக்கும் பணியைத்தான் மேற்கொண்டார் சின்னமருது.

‘பாஞ்சாலங்குறிச்சிக்கே நீங்கள் வாருங்கள். பத்திரமான ஓர் இடத்தில் உங்களை இருக்க வைக்கிறேன். நீங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் இருப்பதையே நான் தெரியாமல் பார்த்துக்கொள்கிறேன். வீரத்தேவனையும் சிங்கத்தேவனையும் தனித் தனியாகச் சந்தித்து நிலைமையைத் தெளிவுபடுத்தி விடுகிறேன். பிறகு உங்களுக்குள் பிளவு இருக்காது’ என்ருர் சின்னமருது.

அவர் கொடுத்த நம்பிக்கையின் பெயரில் அவரோடு புறப்பட்டாள் கண்ணுத்தாள். எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சி வந்து சேர்ந்தார்கள்.

பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டையைக் கண்டபோது அவருக்குக் கனவு காண்பது போன்ற மயக்கம் தட்டிற்று.

‘இவ்வளவு பெரிய கோட்டையை, இவ்வளவு சீக்கிரத்தில் எப்படிக் கட்டி முடித்தார்கள்?’ என்று ஆச்சரியப்பட்டார். முழு உணர்ச்சியும் உற்சாகமும் கொண்டு ஈடுபடுகிற எந்த மனிதனும் எந்தப் பணியிலும் அற்புதமான பயனைக் காண முடியும். ‘இது நம்மால் ஆகுமா?’ என்று சிலர் யோசித்துக் கொண்டிருக்கிற நேரத்துக்குள், அதைவிடப் பெரிய காரியங்களை செயல்வீரர்கள் முடித்து விடுகிருர்கள். பரபரப்பான உணர்ச்சி பல நேரங்களில் மனிதனைப் பழுதுபடுத்திவிடுவது உண்மை. ஆனுல் சில நேரங்களில் அதில் கிடைக்கும் வெற்றி அற்புதமாக அமைந்துவிடுகிறது.

சிறையை உடைத்து ஊமைத்துரையை வெளியேற்றிய புரட்சித் தொண்டர்கள், திட்டம் போடுகிற வேலையில் ஈடுபடாமல் செயலிலேயே நேரடியாக இறங்கிவிட்டதால், நாழிகைக் கணக்கில் கோட்டையைக் கட்டி முடித்துவிட அவர்களால் முடிந்தது.

சின்னமருதுவுக்குத் தன் அண்ணன் ஞாபகம் வந்தது. “நிதானமான அரசியலில்தான் அண்ணன் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிருர்?” என்று எண்ணியபோது அவருக்குக் சிரிப்பு வந்தது. பரபரப்பான அரசியலில், அடிபட்டாலும் சூடுபட்டாலும் உற்சாகமிருக்கத்தான் இருக்கிறது. கண்ணுக்குத் தெரிந்த அதிசயக் கோட்டை சின்னமருதுவின் துடிப்பான உணர்ச்சியைத் தூண்டி விட்டது. பாஞ்சையின் நிலைமை அப்போது வேறுவிதமாக இருந்தது. கோட்டை கட்டப்பட்ட செய்தி கம்பெனிக்குப் போய் விட்டது. கம்பெனிப் படைகள் புறப்பட்டு வந்து கொண்டிருக்கும் செய்தி பாஞ்சைக்கும் வந்து விட்டது. அசாதாரணமான ஒரு பரபரப்புணர்ச்சி கோட்டைக்கு உள்ளேயும் வெளியிலேயும் காணப்பட்டது. நகருக்குள் நுழைகிற ஒவ்வொருவரையும், பாஞ்சை வீரர்கள் சந்தேகத்தோடு சோதித்துக் கொண்டிருந்தார்கள். திட்டத்தோடு பழக்கப்பட்ட படைகளைவிட உணர்ச்சியில் ஒன்று சேர்ந்த புரட்சி வீரர்கள் முறையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களிலே சிலர் மாறுவேடத்திலேயிருந்த சின்னமருதுவைச் சோதிக்கவும் தவறவில்லை. அருகிலிருந்த கண்ணுத்தாள் அடையாளம் தெரியாதபடி முக்காடிட்டுக் கொண்டாள். சின்னமருதுவைச் சோதித்தவர்கள் கேள்விமேல் கேள்வி கேட்டார்கள். தான் சின்னமருது என்பதை வெளிப்படுத்திக் கொள்ள அவர் விரும்பவில்லை. அதனுல் ‘பொய்மையும் வாய்மையிடத்த’ என்ற குறளைத் துணையாகக் கொண்டு பொய்களை அடுக்கடுக்காகச் சொல்லலானுர். பொய் எவ்வளவு சாமர்த்தியமாகச் சொல்லப்பட்ட போதிலும் உண்மையைப்போன்ற உறுதி பெறுவதில்லை. திடீரென்று வீரர்கள் கேள்வி கேட்டதால், தன்னை மறந்த நிலையில் முதலில் வழிப்போக்கனென்று கூறிய சின்னமருது மறு கேள்விகளுக்கும்அதையே மாற்றிக்கொள்ள வேண்டியவரானுர். அவரது குழப்பம் மிகுந்த பதிலுரைகள் வீரர்களின் சந்தேகத்தையே மேலும் மேலும் வளர்த்தன. அதனுல் அவர்சள் அவரைக் கைது செய்யவேண்டியவர்களானுர்கள்.

‘கைது செய்து ஊமைத்துரையிடம் தானே கொண்டுபோவார்கள். அவரிடம் உண்மையைச் சொல்லிவிடலாம். என்ருலும், ஊமைத்துரை, வீரத்தேவன், சிங்கத்தேவன் ஆகியோரின் கண்களுக்குப்படாமல் கண்ணுத்தாளைப் பத்திரப்படுத்த வேண்டுமே! இப்போது வீரர்கள் கண்ணுத்தாளையும் சேர்த்தல்லவா கைது செய்கிருர்கள்?’—சின்னமருதுவுக்கு இதுதான் கவலையாக இருந்தது. இனி யாரென்பதை அவர்களுக்குச் சொன்னுலும் பயன்படாது. இக்கட்டான சூழ்நிலையில் சின்னமருதுவும் தோழர்களும் கண்ணுத்தாளும், பாஞ்சை வீரர்களோடு ஊமைத்துரை இருக்குமிடம் நோக்கிச் சென்ருர்கள். மீண்டும் ஒரு குழப்பத்திற்கு ஆளாகப் போகிருேமே என்ற கவலையோடு கண்ணுத்தாள் நடந்துகொண்டிருந்தாள்.

திருத்தம்

கடந்த இதழில் இளையராணி பொன்னுத்தாள் படத்தின்கீழ் சின்னமருதுவின் மனைவியாள் என்றிருப்பதை, “**சின்னமருதுவின் மனைவியார்**” எனத் திருத்திக்கொள்க.

தொடரும்

நத்தை வயிற்றில் முத்தும்

அன்புள்ள இராகவனுக்கு,
வணக்கம்.

உலகில் மனிதனின் உயர்விற்கு அறிவே அடிப்படை. அனைத்தையும் ஆக்கவும் ஆக்கிய பொருள்களின்று இன்பம் துய்க்கவும், பிறர்க்கு அளித்து மகிழவும் அறிவு அடிப்படையாதலால் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார். ஆனால் அந்த அறிவும், வானின்று இழியும் மழைநீர் இயல்பாகத் தனக்கு ஒரு நிறமும் இல்லாவிட்டாலும், பெய்த நிலத்தின் மண்ணின் நிறம் எதுவோ அதனைப் பெற்று, அந்நிறமுடைய நீராதல் போல-(செம்மண் நிலத்தில் விழுந்த மழைத்துளி, செந்நிற நீராவது போல்) மக்கள் தாங்கள் சாரும் இனத்தினது குணம் இயல்பு முதலியன் படியப்பெற்று, அவ்வத் தன்மையர் ஆகுவர் என்றார் வள்ளுவர்.

"நிலத்து இயல்பால் நீர்திரிந்து
அற்று ஆகும்; மாந்தர்க்கு
இனத்து இயல்பது
ஆகும் அறிவு."

ஆனால் எத்தனை தலைமுறைகள் சென்றாலும் சில குறிப்பிட்ட குணங்கள் ஒரு சாராரின் குருதியில் ஊறி, வழி வழித்தென்படுகிறதே இதற்கு என்ன சொல்வது என்றாய். தந்தை தனது மகனுக்கு, உடன் இருந்து, தானே கற்பிக்காவிடினும் தன் வீரத்தை நேரில் காட்டாவிடினும் அவன் மறைந்த காலத்து நிகழ்ந்தவற்றையும், அவனது புகழையும் கேட்டு, தன் பெருமைக்குரியவன் என்பது மாதிரியான அந்த சூழ்நிலைப் பேச்சுகள்... சூழ்ந்து இருப்பவர் மைந்தனுக்குக் கூறுகின்றனர்.

கள். அதனால் அதிக நேரம் உழைக்கமுடியாது போகிறது. குளிர் நாட்டு மக்கள் நீண்ட நேரம் உழைக்க முடிகிறது. பர்மியர் பாம்பையும் உண்கின்றனர். சில நாட்டினர் தவளைகளையும் உண்கின்றனர். ஏன்? அந்தந்த சூழ்நிலைகள் அவர்களுக்கு அப்படி வாய்ப்புத் தருகிறது.

மகன் பொறி வல்லுனனாகவோ, மாவட்ட அதிகாரி (Collector) யாகவோ வர வேண்டும் என்று தந்தை கல்லூரிக்கு அனுப்புகிறான். ஆனால் மகன் தமிழ்ப் பேராசியனாகிறான். தந்தை ஏமாறுகிறான். ஏன்? தான் சார்ந்த கல்லூரித் தமிழ்ப் பண்பும் தமிழ் இனிமையும் தமிழ்ச் சுவையும் அவனை ஆட்கொண்டு விடுகின்றன. அதனால் பெற்றவர்க்கே பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறான். சூழ்நிலை அல்லது சுற்றுச் சார்பின் வலிமைதானே?

அறிவு வளராத காலத்தில் மக்கள் அவரவர் குலத் தொழில் புரியத் தான் தகுதி உடையவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்தனர். வருவாய் மிகுந்த இடத்திலும் தொழிலிலும் இருந்தவர் செல்வத்தில் கொழித்தனர். பிறகு உயர்ந்தவராகக் கருதப்பட்டனர். வருவாய் குறைந்த தொழில் செய்த உழவர் முதலியோர் வறுமையால் எளியவராயினர். பின்னர் எளியவரே, தம்மைக் குறித்துத் தாமே தாழ்வாகக் கருத வேண்டியதாயிற்று. கூலியாள் மகன் அதனால் தந்தையின் அறிவு, குணம், ஆற்றல் முதலியன இவனுக்கு அப்படியே இருக்கும்; வரும் என்ற பழைய நினைவு இன்னும் சிலரிடை மேனாட்டிலும் இருக்கிறதாம். இது உடன்பாடாகவே இருக்கும். இது சரிதானா என்று எண்ணிப்பார்.

இது சரியானால், உலகப் பெருமக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களின் தந்தை, பாட்டன்மார்கள் யார் என்றே தெரியாதவர்களாக இருந்திருக்கிறார்களே? அப்படி இருந்தும் உலக ஒளியாகும் வண்ணம் நன்மக்களை ஈன்று உலகிற்கே வழங்கி இருக்கிறார்களே? இது பொய்யா? ஸ்டாலினின் தந்தை பேரறிஞனா? ஷேக்ஸ்பியர் தந்தை மாகவியா? ஆப்ரகாம் லிங்கனின் தந்தை ஆளும் குடும்பத்தினனா? நெப்போலியனின் தந்தை மாவீரனா? அது போல நம் நாட்டிலும், இந்திய அரசியல் சட்டத்தை உண்டாக்கி, உருவாக்கி, இன்று அரசியல் நிர்ணய சட்டத்தைச் செய்து தந்த சிற்பி எனப்படும் (Architect of Indian Constitution) மறைத் திரு அம்பேத்கார், மாடி வீட்டு மகனா?

பரம்பரையினால் முன்னேற்றத்திற்கு ஒரு பயனும் இல்லையா என்பாய். பரம்பரை எந்தவிதத்தில் உதவுகிறது என்று பார். புகழ் ஏணியின் முனையில் நின்றவர்கள் எண்ணிக்கை அவரவர் குடும்பங்களுக்கு எத்தனை என்று கணக்கிட்டனர் அமெரிக்கர். அதாவது அறிஞர் முற்படுகிறான். வளர்ச்சியும் உயர்வும் எங்கு எளிது; எங்கு அரிது என்று நினைத்துப் பார்!

சூழ்நிலை ஒருவனைப் பெருமளவு பாதிக்கக்கூடியது. அறிவெனும் வித்து உரிய பயன் தர வேண்டுமானால், அது நல்ல சூழல் என்னும் விளை நிலத்து ஊன்றப்பட்டு முயற்சி எனும் நீர் பாய்ச்சப்பட்டு வரல் வேண்டும். நிறை கருப்பமுற்ற காலத்து உணவின்மையால் வள்ளிக் கிழங்கை வேக வைத்துத் தின்றுவிட்டுக் காலங் கழித்ததால், பிறந்த குழந்தை ஓயாது நோய் வாய்ப்பட்டு வருந்தியது என்று, அந்தத் தமிழாசிரியரின் பண்புமிகு துணைவியார் சொன்னது உனக்கு நினைவில்லையா? அதே தாயின் வயிற்றுதித்த பிற குழவிகள் உடல் உரத்துடன் இருக்க, இதுமட்டும் நைந்து நலிவதற்குக் காரணம் என்ன? கருப்பத்தில் தாயின் வயிற்றில் போதுமான வளமுடைய உணவு இன்மையால்–அதாவது குழந்தையின் அந்த சூழ்நிலை சத்து அற்று இருந்தது தானே காரணம்?

உயர் பதவிக்கு பெரிய குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததுபோல, கவிதை ஆற்றலுக்கும், தெய்வ அருள் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததல்லவா? கலைமகள் நாவில் எழுதினதுதான் கம்பனது கவிதா மேன்மைக்குக் காரணம் என்றனர் அன்றோ? ஆனால் அப்படிப்பட்ட

நல்ல வீட்டில் தேளும்--

சூழ்ந்து இருப்பவர் மைந்தனுக்குக் கூறுகின்றனர். அதனால், அவனது உள்ளத்தில் தனது முன்னோர் எய்திய நன்னிலையை எய்த வேண்டும் என்ற அவா கருக்கொள்கிறது. படிப்படியாக விடாமுயற்சியால் உழைத்து முன்னேறுகிறான். இதுவும் சூழ்நிலையின் பயன்தானே?

சுற்றுச் சார்பு பல திறப்படும். இயற்கைச் சூழ்நிலை, மலை, வயல் வெளி, கடல்பரப்பு. தட்ப வெப்பம், கிடைக்கும் இயற்கைப் பொருள்கள் முதலான மக்கள் தங்கள் தேவைக்கு அமைத்துக்கொள்ளும் செயற்கைச் சூழ்நிலைகள் நூல் நிலையம், இசை அரங்கு, கலைக் கழகம், வணிகர் சங்கம், புலவர் குழாம் முதலியன. அவரவர் தத்தமக்கு நாட்டமுள்ளவற்றைப் பயன்படுத்தி நலன் அடைவர். பெரும் நகரங்களில் இத்தகையன எளிதில் வாய்க்கும்.

மலைப்பகுதியில் பிறந்து வளர்ந்த மக்கள் பொதுவாக உடற்கட்டும் நல்ல வளர்ச்சியும் கடின உழைப்பும் அஞ்சாமையும் உடையவர்களாக இருத்தலும், நீர்வளம் நிலவளம் போன்ற பல வளம் கொண்ட நிலப் பகுதியில் வாழும் மருத நில மக்கள் பெரும்பாலும் சோம்பலை உடையவர்களாகவும், கடின உழைப்பிற்கு உகந்தவர்கள் அல்லாதவர்களாகவும் இருக்கக் காண்கிறோம்.

"Peace and plenty breeds cowards."

மிக வெப்பம் உள்ள பகுதி மக்கள் விரைவில் களைப்புக்கொள்ளுகிறார்

கல்வியில் சிறந்து பெரிய பதவி வகிக்க வேண்டும் என்ற எண்ணம், கற்பனையாகவும் அவனுக்கு எழாது போயிற்று; நினைக்கத் தைரியமும் இல்லாது போயிற்று. ஆனால் இன்று தென்னகத்தில் அறிவியக்கம் செய்த மாபெரும் தொண்டு இந்த அடிப்படை நினைவையே தூள் தூளாகத் தகர்த்து எறிந்துவிட்டது.

அமெரிக்கர் இப்படிப்பட்ட ஐயங்களைச் சோதனை செய்து பார்த்தே தீர்த்துவிட்டனர். இரட்டைப்பிறவி (Twins) குழந்தைகள் பிறந்தவுடன், இரண்டையும் உடனே பிரித்துவிடுவது; ஒன்றை மிக உயர்ந்த செல்வப்தர் சூழ்நிலையில் வளர்ப்பது; பிறிதொன்றை மிகத் தாழ்ந்த சூழ்நிலையில் வைத்து வளர்ப்பது; பிறகு காளைப் பருவம் வந்தவுடன் இருவரையும் ஒருங்கு கொணர்ந்து தேர்வு வைத்து, அவர்களது அறிவு ஆற்றல் சிந்தனைத் திறன், உடல் கட்டு, உள்ள உரம் முதலியவற்றைப் பரிசோதித்ததில் (GalTon) என்பார் போன்றார் சில உண்மைகளைக் கண்டார்கள். உடல் வளர்ச்சி, உடல் நலம் (Health) அறிவு கூர்மை முதலியன பரம்பரைக்கு ஏற்பவும், (அதாவது தந்தை தாயின் தன்மை) நல்லொழுக்கம், சமூகப் பழக்க வழக்கங்கள், கொள்கைகுறிக்கோள் முதலியனதான் சார்ந்து வளர்ந்த சூழ்நிலையையும் மக்களையும் பொருத்தும் இருக்கின்றன என்று கண்டனர். தந்தையின் குருதிதான் மகன்.

எந்தக் குடும்பத்தில் அதிகம்தோன்ற முடிகிறது என்று ஆராய்ந்தபோது; கையை உழைத்துப பிழைக்கும் தொழிலாளிகள் குடும்பங்களில் 48000-க்கு ஒன்று மேலோங்கி மிளிர முடிகிறதாம். ஆனால் அதே நிலைக்கு வர, அறிவு உழைப்பால் வாழும் மக்கள் குடும்பங்களில் இருந்து மேற்கூறிய 48000-க்கு 30 பேர்களும், நிலக்கிழார் இல்லங்களில் 70 பேர்களும், வணிகர் குடும்பங்களில் 600 பேர்களும், வேறு அலுவலர் குடும்பங்களில் 1035 பேர்களும், ஆனால் பாதிரிமார் குடும்பங்களில் 2400 பேர்களுமாக இருக்கக் கண்டார்கள்.

கற்கும் மாணவர்களும் தங்கள் கல்வி முன்னேற்றத்திற்கு, குடும்பமும் சூழ்நிலையும்தான் முக்கிய காரணங்கள். கற்றவீட்டுக் குழவிகள் பள்ளி ஒழிந்த நேரத்திலும், அறிவு வளரும் சூழலில் உறைகின்றனர். மற்றவர் குழவிகள் பள்ளி நேரத்தில் கூட முழு மனதோடு பாடத்தைக் கவனிக்கமுடியாத அளவு குடும்பத் தொல்லையிலோ, வேறு பல கடும் உழைப்பு காரணமாக உறக்கம் வரும் நிலையிலோ உள்ளனர். முன்னவன் 80 90 என்று மதிப்பெண் பெற்றால் இவன் 20 30-க்கும் முயன்று உழல நேருகிறது. அவன் புகழப்படுகிறான். மேலும் உழைத்து முன்னேறுகிறான். இவன் இகழப்பட்டு இருந்த தன்னம்பிக்கையையும் இழந்து, அறிவுத் துறையினின்று ஒதுங்கி, கைவேலை செய்து பிழைக்க

மூட நம்பிக்கை மலிந்திருந்த காலத்திலேயே திரு. வ. வே. சு. (ஐயர்) அவர்கள் இதை மறுத்து "அவன் நாவில் கலைமகள் எழுதவும் இல்லை; அருள் பாலிக்கவும் இல்லை. கம்பன் வடமொழி உபநிடத்துக்களைஊன்றிப் படித்து அதில் உள்ள பல கருத்துக்களையும் நயங்களையும் எடுத்து ஆண்டான்" என்று கூறி இடம் சுட்டி விளக்குவாராம்!

இதை ஏன் கூறுகிறேன் எனின், உயர்வு அடைய உயர் குடியும் கடவுள் அருளும் இருந்தால்தான் முடியும் என்ற அர்த்தமற்ற எண்ணம் எத்தனை இளைஞரை அழுத்துகிறது. இன்னும் பலர் இத்தாழ்ந்த மனப்பான்மையிலேயே மாழ்குகிறார்கள். இன்று பெரிய நிலையில் உள்ளவர்களின் தந்தை பாட்டன்மார்கள், இரண்டு மூன்று தலைமுறைக்கு முந்தியே பெரிய பெரிய இடத்தைச் சார்ந்து 'இடம் பிடித்துக்கொண்டார்கள்.' அடுத்த தலைமுறையாளர்க்கு அந்த உயர்விடம், உழைத்துப் பெறாத உரிமைச் சொத்தாகிவிட்டது. அந்த அளவிற்கு ஏழை வீட்டுப் பிள்ளைகள் உயர விழைந்தால், வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட வேண்டி இருக்கிறது.

இதனால்தான் அன்று சொன்னேன், "பரம்பரையால் என்ன சாதிக்கமுடியுமோ, அதைச் சூழ்நிலையாலும் சாதிக்கமுடியும்" என்று "What heredity can do, environment can also do."

—மா. பொ. இராமச்சந்திரன்

மாறான விளைவுகள்! வாழ்வின் இயல்புகள்!

திட்டம் தீட்டுவோர்க்கு

இந்தியாவின் வரவு செலவுத் திட்டம் வெகு விரைவில் ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு வந்துவிடும் என்று அண்மையில் திரு. கோபால ரெட்டியார் கூறியுள்ளார்.

மூன்றுவது ஐந்து ஆண்டு திட்டம் மிகப் பெரிய அளவில் இருக்கும், இருக்கவேண்டும் என்று பேசப்படுகிறது. எப்படியிருந்தாலும் பத்தாயிரம் கோடி ரூபாய்களுக்குக் குறைந்த திட்டமாக அது இருக்க முடியாது என்று தெரியவருகிறது.

ஆயிரம் கோடி!

பத்தாயிரம் கோடி!!

இவை எதைக் குறிப்பிடுகின்றன?

இந்திய நாடு - பாரத வர்ஷம் - வெகு வேகமாகப் பொருளாதாரத் துறையிலே முன்னேறிக்கொண்டு வருவதையும், நாட்டிலே பலபெரிய பெரிய ஆலைகளும், தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படுவதையும், குறிப்பிடுகின்றன அல்லவா? இந்தியாவின் வரவு செலவுத் திட்டம் ஆயிரம் கோடிக்கு வருகிறதென்றால், நாட்டின் பொருளாதாரம் நிச்சயமாகப் பெருகிவிட்டது என்றுதான் பொருள். மறுப்பதற்கில்லை; ஐந்நூறு கோடியாக, அறுநூறு கோடியாக இருந்த வரவு செலவுத்திட்டம் ஆயிரம் கோடியாக ஆகிவிட்டது என்றால், வரவிலும் உயர்வு இருக்கிறது, அந்த அளவிற்குச் செலவிலும் உயர்வு இருக்கிறது, அந்த அளவிற்கு மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் அதிகமாகக் கிடைக்கின்றன என்றுதான் பொருள்; மறுப்பதற்கில்லை.

அண்மையிலே கண்டோம் மிகப் பெரிய உருக்கு இரும்பு ஆலைகள், பிலாயிலும், ரூர்கேலாவிலும் இயங்க ஆரம்பித்ததை. துர்காபூரிலும் ஏற்கெனவே ஓர் ஆலை இயங்கி வருகிறது. மூன்று ஆலைகளும் சேர்ந்து ஏறத்தாழ ரூ 558 கோடியை விழுங்கி இருக்கின்றன; அவை இயங்க ஆரம்பித்ததும், இந்தியாவிற்குத் தேவையான இரும்பும் எஃகும், இங்கேயே கிடைக்கும்; பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று கூறப்படுகிறது. ஜெர்மன் நிபுணர்களும், ருஷ்ய நிபுணர்களும் சேர்ந்து பிலாயிலும், ரூர்கேலாவிலும் நிர்மாணித்துள்ள இரும்பு ஆலைகள் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றப் பாதையில் ஒரு திருப்பம் என்று கூறுகிறார்கள். பெருமிதத்தோடு வரவேற்கிறோம்; அவை வெற்றிகரமாக வேலை செய்ய ஆரம்பித்த பிறகு "நம் நாட்டின்" வளம் முன்னேறும் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்னையிலேகூட அண்மையில் டன்லப் கம்பெனியாரின் ஒரு ரப்பர்த் தொழிற்சாலை— ரூபாய் இரண்டரை கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் கலந்துகொண்ட திரு. லால்பகதூர் சாஸ்திரி—யூனியன் அமைச்சர்— பேசியிருக்கிறார். "இந்தியாபோன்ற ஒரு பரந்த தேசத்தில் தொழில்கள் குவிந்திராமல், பல இடங்களில் பரவி இருப்பது நல்லது." (It is the earnest desire of the Government to see that the development of new industries is as widespread as possible and not concentrated in a few major cities.)

இதை அடுத்து, கிண்டியில் தொழில் பண்ணைகள் இருபத்தாறு திறக்கப்பட்டுள்ளன; இவை சிறு சிறு தொழில்களை மேற்கொண்டு, பொருள்களை உற்பத்தி செய்ய இருக்கின்றன. மேலும் பல்லாவரத்திற்கு அருகில் 'இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி' ரூ. 40 லட்சம் மூலதனத்தில், மின்சாரக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. இதையும் திரு. லால் பகதூர் திறந்து வைத்துள்ளார்.

ஹிராகுட்டில் டாக்டர் ஹரி கிருஷ்ண மெஹ்தாப் இந்திய அலுமினியம் கம்பெனியாரின் கிளைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து வைத்தார் அண்மையில். இதன் மூலதனம் ரூ. 5 கோடி. இது ரூ. 14 கோடியாக உயரப் போகிறது. ஓர் ஆண்டிற்கு 10,000 டன் அலுமினியம் உற்பத்தியாகும் இங்கே; விரைவில் ஓர் ஆண்டிற்கு 50,000 டன் உற்பத்தி செய்ய முயற்சிகள் நடக்கின்றன.

இவையெல்லாம் எதைக் குறிப்பிடுகின்றன? இந்தியாவின் பொருளாதாரம் முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதை அல்லவா நமக்கு அறிவிக்கின்றன? இந்தியாவின் வரவு செலவுத் திட்டம் ஆயிரம் கோடிக்கு வருகிறதென்றால், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ராஜ்யமும் அந்தத் தொகை கிடைக்க எவ்வளவு வருமானத்தைக் கொட்டிக் கொடுத்திருக்கின்றன? தபால், தந்தி, இரயில், வருமான வரிபோன்றவைகள் மூலம் எவ்வளவு பணம் மத்திய அரசாங்கத்துக் கஜானாவிற்குப் போக வழி வகைகள் செய்து கொடுத்திருக்கின்றன? எந்த அளவிற்குப் பணத்தைத் தேடிக் கொடுத்தனவோ, அந்த அளவிற்கு அவை மத்திய சர்க்காரிடமிருந்து பிரதி பலன் பெற்றனவா? அந்த அளவிற்கு அல்லாவிட்டாலும், கொடுத்ததில் பாதியளவாவது பலன் பெற்றனவா? தங்கள் வருமானத்தில் எத்தனை பங்கை மத்திய அரசிற்குக் கொடுத்துவிட்டு ராஜ்யத்தில் வசூலாகாத வரிகளை விதித்துக் கொண்டு அவதிப்படுகின்றன, வருமானமில்லாமல்? வருமானம் தரக்கூடிய வரிகளையெல்லாம் மத்திய அரசினர் சொந்தமாக்கிக்கொண்டுள்ளதால், மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் வெகு விரைவில் ஆயிரம் கோடியை எட்டிப் பிடிக்கும் என்று கோபால ரெட்டியார் கூறிக்கொள்கிறார் மகிழ்ச்சியோடு. அதே நேரத்தில் ராஜ்யங்களும், நகரசபைகளும், இதர ஸ்தலஸ்தாபனங்களும் போதுமான வருமானம் இல்லாத காரணத்தால், புதிய புதிய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றன. மத்திய அரசினர் எவ்வளவு பணம் தருகின்றனரோ, அந்த அளவிற்கே தங்கள் தங்கள் ராஜ்ய வளர்ச்சிக்கான திட்டங்களைத் திட்ட முடிகிறது.

மத்திய அரசினர் தங்கள் வரவு செலவுத் திட்டம் பெருகிவிட்டதாகக் கூறிப் பெருமிதம் கொள்வதில் பொருள் இல்லை; அதன் பலனாக ஒவ்வொரு ராஜ்யமும் நன்மையும் வசதிகளும் வளர்ச்சியும் பெற்றால்தான் பெருமிதம் அடையமுடியும். ஆகவே மத்திய அரசாங்கம், அந்தந்த ராஜ்யங்களில் வசூலாகும் வருமானத்தில் பெரும்பங்கை அவைகளுக்கே திருப்பிக்கொடுத்துவிட வேண்டும்; அப்போதுதான் எல்லா ராஜ்யங்களும் ஒரே அளவில் புதிய புதிய தொழிற்சாலைகளை நிறுவவும், பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையவும் முடியும். இல்லையேல் திரு. லால்பகதூர் சாஸ்திரி கூறியது பொய்யாகிவிடும்.

அதேபோல்தான், மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்திலும் பத்தாயிரம் கோடி ரூபாய் கொண்ட ஒரு திட்டத்தில் - வளர்ச்சியுறுத சென்னை, ஒரிஸா, அஸாம் போன்ற ராஜ்யங்கள் மேலும் முன்னேற்றமடைவதற்காக அதிகத் தொகைகளை ஒதுக்கவேண்டும். வளர்ச்சி பெற்றுள்ள பம்பாய், உத்திரப் பிரதேசம் போன்ற ராஜ்யங்களுக்குத் தொகைகளைக் குறைக்க வேண்டும்; நான்காவது இரும்பு ஆலையைச் சென்னை ராஜ்யத்தில் நிறுவுவதற்கு முயலவேண்டும்; அந்தந்த ராஜ்யத்தில் எந்தெந்த மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதைக் கண்டறிய ஒரு 'சர்வே' நடத்தவேண்டும்; அதன் பின்னர் அந்தச் சர்வேயின் அடிப்படையில், அந்தந்த ராஜ்யங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு, புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம், அந்த ராஜ்யத்தைப் பொருளாதார வளம்பெறச் செய்ய வேண்டும்; இந்த அடிப்படையில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் திட்டப்பட வேண்டும். "சென்னையா இந்தா முப்பதுகோடி எடுத்துக்கொள்! பம்பாயா! இந்தா அறுபது கோடி! பஞ்சாபா! இதோ பத்துக் கோடி! கேரளமா! இதோ பதினைந்து கோடி! ஆந்திராவா! இதோ ஐம்பது கோடி!" என்று அந்தந்த ராஜ்யத்து நிதிமந்திரிகளின் செல்வாக்கிற்கேற்பதொகைகளை ஒதுக்கும் கண்மூடித்தனமான கொள்கை ஒழியவேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் எவ்வளவு முன்னேறியுள்ளது, எந்தெந்தத் துறைகளில் முன்னேறியுள்ளது, எதெதில் முன்னேறவில்லை என்று கண்டறிந்து விஞ்ஞான ரீதியில் ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் தொகைகளை ஒதுக்கவேண்டும். அப்போதுதான் லால்பகதூர் கூறியபடி எல்லா ராஜ்யங்களும் முன்னேற முடியும்; இல்லையேல் முன்னேற்றம் அடைந்துள்ள ராஜ்யமே முன்னேறும்; முன்னேருத ராஜ்யம் அப்படியே இருக்கும். இருள் உள்ள வீட்டிற்குத்தான் விளக்குத் தேவையே தவிர, விளக்குகள் பிரகாசிக்கும் வீட்டிற்கு விளக்குகள் தேவையில்லை; அதற்கு ஒரு திட்டக்குழு தேவையில்லை; அதற்கு ஒரு தலைவர், அதிகாரிகள், எடுபிடிகள், நிதிமந்திரிகள், மாநாடுகள், அறிக்கைகள் முதலியன தேவையில்லை. முன்னேற்றமடைந்த ராஜ்யமே மேலும் முன்னேற்றமடைய இவைகள் எல்லாம் தேவையில்லை. எல்லா ராஜ்யங்களிலும் பெரிய இரும்பு ஆலைகள் நிர்மாணிக்க முடியாது; உண்மை; ஒப்புக்கொள்கிறோம்; எல்லா ராஜ்யங்களையும் பம்பாயைப்போல் ஆக்கமுடியாது; உண்மை; ஒத்துக்கொள்ளத் தயங்கவில்லை; ஆனால் ஒவ்வொரு ராஜ்யத்திலும் குறைந்தபட்சம் ஏதாவது ஒன்றிரண்டு மூலப்பொருள்கள் கிடைக்கின்றன; அவைகளைக் கொண்டு அந்த ராஜ்யத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லலாம். அப்போதுதான் இந்தியா போன்ற ஒரு பரந்த தேசத்தில் தொழில்கள் குவிந்திராமல், பல இடங்களில் பரவியிருப்பது நல்லது என்று லால்பகதூர் கூறுவதில் உண்மை இருக்கமுடியும்.

முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின்போது தூங்கி விட்ட மக்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தங்கள் ராஜ்யத்திற்குத் தேவையான தொகை கிடைக்க இப்போது முதற்கொண்டே விழித்திருந்து செயலாற்றுவார்களாக!

மத்திய அரசினரும், பத்தாயிரம் கோடி திட்டத்தில் எல்லா ராஜ்யங்களும் திருப்தி அடையும் வகையில் தொகைகளைப் பிரித்துக் கொடுத்தால்தான், இந்தியா போன்ற ஒரு பரந்த தேசத்தில் எல்லா ராஜ்யங்களும் முன்னேற முடியும். செய்வார்களா?

—நா. ஜகந்நாதன் எம். ஏ.

மதுரை நகர்

★ தி. மு. க. தேர்தல் நிதி நாடகம் ★

மதுரை, தமுக்கம் கலையரங்கில்

8-3-'59 ஞாயிறு இரவு 10-மணிக்கு

உதயசூரியன்

நாடகம் நடைபெறும்.

கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.,
மனோரமா, எம். என. கிருஷ்ணன்
மற்றும் பலர் நடிப்பர்.

—மதுரை நகர் தி. மு. க. தேர்தல் குழு.

நன்கொடை ரூ. 5, 3, 2, 1. பெண்களுக்கு அணா 8.

நிலையின் இழிந்த மாந்தர்...?

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்துமே சான்றாண்மைக்குரிய தூண்கள் என்று வரையறுக்கிறார். ஒவ்வொரு பண்புகளையும் காட்டுவதோடு நில்லாமல் அதுபற்றி விளக்கமும் தருகிறார். "சால்புடைமை" வேண்டும் என்று சொல்பவர் "சால்பு" எது என்றும் விளக்குகிறார். "கொல்லா நலத்ததான நோன்மையை விட பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு" என்று கூறுகிறார். "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வதுதான் சால்பு!-அது செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு!" எனக் கேள்வி போடுகிறார். அதோடு நிற்கவில்லை; சான்றாண்மைக்கு மட்டும் விளக்கம் கொடுத்தால் போதாது என்று நினைத்து சான்றாண்மைக்குரிய தூண்களான 'அன்பு'க்கு விளக்கம் தருகிறார்-நாணுடைமைக்கு விளக்கம் கூறுகிறார். 'கண்ணோட்டம் பற்றிக் கூறுகிறார். 'வாய்மை' பற்றி வரைந்துமிருக்கிறார். அவர்தான் வள்ளுவர்!

'அன்பு' பற்றிக் கூறும்பொழுது அன்பு இல்லாதவர்கள் எல்லாவற்றையும் தாமே பெறும் சுயநலவாதிகள் என்றும், அன்புடையவர் எலும்பையும் 'பிறருக்கு உரிமையாக்கும் உயர்பண்பாளர் என்றும் காட்டுகிறார். "அன்பின் வழியதுதான் உயிர்நிலை. அது இலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்று அன்பில்லாதவரை எள்ளி நகையாடுகிறார். அன்பில்லாதவனுடைய வாழ்க்கை 'பாலைவனத்தில் பட்டமரம் தளிர்த்ததற்கு ஒப்பு,' என்று பயனில்லாமையைக் காட்டுகிறார்.

'வாய்மை' பற்றிய விளக்கத்தின்போது 'யாதொன்றும் தீமையிலாத சொல்லுவதே வாய்மை' என்று வரையறுக்கிறார். வாய்மையைவிட நல்லது பிரிதொன்றுமே இல்லை என்று அடித்துக் கூறுகிறார். 'பொய்மை' கூட வாய்மைதான்-புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் என்று தெளிவிக்கிறார். பண்பு பற்றிப் பகரும்போது பண்பற்றவன் கூரிய அறிவுபடைத்தவன் என்றாலும் மரத்திற்கு ஒப்பானவன் என இழிவுபடுத்துகிறார்.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்"

என்று கூறுகிறார்.

அன்பு வேண்டும் என்றார்; அது இல்லாதவன் உயிர் இல்லாதவன் என்று இகழ்ந்தார். பண்பு தேவை என்றார். அது அற்றவன் மரத்திற்கு ஒப்பானவன் என்று இழிவுபடுத்தினார். இவ்வாறு அன்பிற்கும், பண்பிற்கும், வாய்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்த வள்ளுவன் **'மானத்திற்கு'** முதலிடமே கொடுத்துவிட்டார். மானம் இழந்தபின் வாழவே கூடாது என்று மான உணர்ச்சிக்கு உயிரினும் மேம்பட்ட நிலையைக் கொடுத்திருக்கிறார். **இளிவரின் வாழாத மானம் உடையாரை ஒளி தொழுது ஏத்தும் உலகு'** என்று கூறுகிறார். இந்த மான உணர்ச்சி வேண்டும் என்பதை இத்தனை விளக்கமாகக் காட்டிய வள்ளுவர் அது இழந்தவனை மயிருக்குச் சமமாக மதிக்கிறார். மயிர் என்று பொதுவாகச் சொன்னால்கூடத் தலையில் உள்ளளவும் அதற்கு மதிப்பு உண்டு என்று நினைத்துவிட்டார். இன்றைய நாகரீகம் தலைமயிரிலே நடமாடுகிறதல்லவா? சீவியும், பின்னியும், சிங்காரச்சடைகளும், அஜந்தா கொண்டையும் காட்சிதரும் இன்றைய நாகரீகத்தை அன்றே கண்டுவிட்டார் போலும். எனவே தலைமயிருக்குச் சமம் என்று கூறினால்கூட அவனுக்கு உரைக்காது என்று எண்ணித் **தலையிலிருந்து, உதிர்ந்த மயிருக்குச் சமம்** என்று கூறிவிட்டார். இன்றுகூட மிக மிக இளப்பமாக அலட்சியமாகப் பச்சைத்தமிழில் பேசும பலர் 'மயிர் ஒன்றே போச்சு' என்று கூறுவதை நம்மில் பலர் கேட்டிருக்கலாம். மானஉணர்ச்சியற்றுத் தன்னிலை இழந்தவனை எவ்வளவு கீழ்த்தரமாக வள்ளுவர் காட்டுகிறார் பார்த்தீர்களா? "என்னய்யா!...சும்மா அளக்கிறீர்!...வள்ளுவர் மயிர் பற்றியெல்லாமா குறள் பாடியிருக்கிறார்." என்று உங்களிலே சிலர் கேட்கும் கேள்வி என் காதில் விழுகிறது. குறளையே கூறிவிடுகிறேன்-படியுங்கள் சிந்தியுங்கள் :

"தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

— **ரா. மதிவாணன்**

தோழர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, தென்றல் 1958 பொங்கல் மலரில் வெளியான **அண்ணா** அவர்களின் படமும், 1959 பொங்கல் மலரில் வெளியான **எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர்., கண்ணதாசன்** ஆகியோர் இணைந்த படமும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. வேண்டும் தோழர்கள் அஞ்சல் செலவு உள்படக் கீழ்க்கண்டபடி அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க :

அண்ணா படம் ...	**31 புதிய காசுகள்**
எம். ஜி. ஆர். எஸ். எஸ். ஆர். கண்ணதாசன்	**31 புதிய காசுகள்**

விற்பனையாளர்கள், தேவையானவற்றிற்குக் கழிவு 6 காசுகள் நீக்கி பிரதி ஒன்றுக்கு 25 காசு வீதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

பொறுப்பாளர்,
"தென்றல்"

தி. மு. கழகப் பொது உறுப்பினர் புதுப்பித்தல் - சேர்த்தல்

குறித்துப்

பொதுச்செயலாளர் அறிக்கை

1. புதுக்கோட்டை பொதுக்குழுவில் முடிவெடுத்தபடியும், கழகத்தின் பொதுத்தேர்தல் அண்மையில் நடைபெற ஆவன செய்யப்பட வேண்டியதையொட்டியும், சிற்றூர்-பேரூர்-நகரக் கிளைகள் தத்தமது தற்போதைய உறுப்பினர்களைப் புதுப்பித்தும் புதிதாகச் சேரவிருக்கும் உறுப்பினர்களைச் சேர்த்தும் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப 1—4—59-ஆம் நாளிலிருந்து 30—6—59-ஆம் நாள் வரையில் காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.

2. உறுப்பினர் கட்டணம் வழக்கமான முறைப்படியே ஒவ்வொரு உறுப்பினரிடமும் 50 புதுக்காசுகள் வீதம் வசூலிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினர் கட்டணத்திலும் 25 புதுக்காசுகள் அந்தந்த கிளைக் கழகங்களால் வைத்துக் கொள்ளப்பட்டு, மீதமுள்ள 25 புதுக்காசுகள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

3. உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படுதலும் புதிதாகச் சேர்க்கப்படுதலும் அதற்கெனத் தலைமைக் கழகத்தால் அச்சிடப்பட்டு அனுப்பப்பெறும் விண்ணப்பத் தாள்களில்தான் பதிவு செய்யப்பட்டுத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். வெற்றுத் தாளிலோ வேறு முறையான தாள்களிலோ பதிவுசெய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் பதிவுசெய்து கொள்ளப்படமாட்டா.

4. தலைமைக் கழகத்தால் அச்சிடப்பெற்ற உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டச் செயலாளரிடமோ, அல்லது அவரால் அறிவிக்கப்பட்ட பொறுப்பாளரிடமோ பெற்றுக்கொள்ளலாம். தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்கள் கிளைக் கழகங்களுக்கு நேரடியாக அனுப்பப்படமாட்டா.

5. உறுப்பினர்கள் சேர்க்கும் பணி, கிளைக் கழகச் செயலாளர்கள் மூலமும், கிளைக் கழகங்கள் நிறுவப் பெறாத ஆனால் நிறுவப் பெறும் நிலையிலுள்ள ஊர்களில் மாவட்டச் செயலாளராலோ அல்லது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் வட்டப் பொறுப்பாளராலோ நியமிக்கப்படும் பொறுப்பாளர் மூலமும் தான் நடைபெறவேண்டும். கிளையின் செயலாளர் அல்லது உருவாகப் போகும் கிளையின் பொறுப்பாளர் ஆகியவரின் கையொப்பத்தோடுதான் உறுப்பினர் விண்ணப்பத் தாள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

6. புதுப்பிக்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் கட்டணத் தொகையில் சரி பகுதியை (ஒவ்வொருவர்க்கும் 25 புதுக்காசு வீதம்) தலைமைக் கழகத்திற்கு மணியார்டர்மூலம் அனுப்பி, அந்தப் பற்றுச்சீட்டை (இரசீதை) உறுப்பினர் விவரங்களடங்கிய தாள்களுடன் இணைத்துத் தலைமைக் கழகத்திற்கு நேரடியாக அனுப்பவேண்டும்.

7. உறுப்பினர் கட்டணத் தொகையையும், உறுப்பினர் தாள்களையும் அனுப்புகின்றவரின் தெளிவான முகவரியுடன், "பொதுச் செயலாளர், தி. மு. க., 'அறிவகம்', சென்னை-13" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

8. 1955-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 1959-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாள்வரை சேர்த்தனுப்பப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உறுப்பினர் உரிமையை மறு அறிக்கையில் குறிப்பிடும் காலம் வரையில் பெற்றவராவர்.

9. மார்ச் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாள்வரை எந்தக் கிளையும் புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்தனுப்பும் பணியில் ஈடுபடவேண்டாம் என்று கிளைகளெல்லாம் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

10. **1—4—59-ஆம் நாளிலிருந்து 30—6—59-ஆம் நாள் வரையில்** புதுப்பிக்கப்பட்டும், புதிதாகச் சேர்க்கப்பட்டும் பதிவு செய்யப்படுகிற உறுப்பினர்கள், மறு அறிக்கையில் குறிப்பிடும் காலத்திலிருந்துதான் உறுப்பினர் உரிமையைப் பெற்றவராகக் கருதப்படுவர். உறுப்பினர்ச் சேர்த்து அனுப்புவதில் தற்போது கிளைக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும், உறுப்பினர்களைப் பதிவுசெய்து அனுப்புவதில் தலைமைக் கழகத்திற்கு நேர்ந்துள்ள அனுபவமும் இந்தத் தடவை உறுப்பினர்ச் சேர்த்தலைச் சீரிய முறையிலும் விரைவாகவும் செய்து முடிக்கப் பெரிதும் பயன்படுவனவாகும் என்று நம்புகிறோம்.

'அறிவகம்', சென்னை-13
28—2—1959

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.



தமிழ் நூல்களில் மலைவாழ்வோர் பெயர்கள்

ஐயா,

கடந்த பல்லாண்டுகளாக ஆதி வாசிகளைப்பற்றியும், காடர்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து வருகிறேன். மேலைநாட்டினர் இயற்றிய நூல்களில் அவ்வினத்தாரின் பெயர்களை எங்ஙனம் உச்சரித்து இயற்றினர்களோ, அங்ஙனமே சில தமிழன்பர்கள் தங்கள் நூல்களிலும் கட்டுரைகளிலும் உபயோகித்துக் கட்டுரைகளும் நூல்களும் இயற்றியுள்ளனர்.

நீலகிரியில் வாழும் "தோதுவர்கள்" என்பாரை, "தோடா" என்றும் "டோடா" என்றும், "கோத்தர்கள்" என்பாரை, 'கோடர்" என்றும் எழுதியுள்ளனர். இன்னும் சில தெலுங்கு நாட்டு ஆதி வாசிகளின் பெயர்களையும், அப்படியே ஆங்கிலத்தில் இருப்பதைப் போல் தங்கள் தமிழ் நூல்களிலும், கட்டுரைகளிலும் இயற்றியிருக்கின்றனர்.

மேலும் "மானிட வியல்" ஆராய்ச்சி செய்யும் அன்பர்கள், சங்க கால நூல்களையும் சில கவிதைகளையும் அவர்கள் தங்களின் கட்டுரைகளிலும், அவர்களைப்பற்றி எழுதும் நூல்களிலும் இணைப்பது நலம். இணைப்பதற்குப் பல செய்யுள்கள் இருக்கின்றன.

இன்று, காட்டிலும் மலையிலும் வாழும் மக்கள், கல்வி கற்றுப் பல துறையிலும் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். இவ்விதமான (பிழைபாடுடைய) சில கட்டுரைகளையும் நூல்களையும் அவர்கள் கண்ணுற்று வருந்தினர். அவர்கள் வருத்தத்தைத் தீர்ப்பது நம் கடனன்றோ ?

அன்புள்ள

சென்னை-28 }
21-2-59 }

பிலோ இருதயநாத்

★

ஆட்டிறைச்சியும் விற்பனை வரியும்

ஐயா,

இறைச்சி வர்த்தகர்கள் பெரும்பாலும் எளியவர்களாயும் கல்வியற்றவர்களாயும் உள்ளனர். அவர்கள் பொது விற்பனைச் சட்டத்தில் கண்டுள்ள விதிகளைப் புரிந்து நடக்கவும் இயலாதவர்கள்.

அவர்களில் பெரும்பாலோர் சிறு வியாபாரிகள் தமக்கென ஒரு கணக்கப்பிள்ளையை வைத்துக்கொள்ளவும் போதிய வருமான வழியற்றவர்கள். தாமே தம் கணக்குகளை வைத்துக்கொள்ளலாம் எனின், அவர்களுக்குப் போதிய கல்வியறிவும் இருப்பதில்லை. தவிர அவர்கள் நாள் முழுதும் இறைச்சியைத் தொட்டே உழைக்க வேண்டியிருப்பதால், எழுதத் தெரிந்த சிலராலும் கணக்குப் புத்தகங்களைக் கையாள முடிவதில்லை.

மாமிசம் கெட்டுப் போகக்கூடிய ஒன்று. அன்றுடம் விற்பனையாகாது மிஞ்சும் ஏராளமான இறைச்சியோ, மறுநாள் விற்பனைக்கு உதவாது கெட்டுப் போய்விடுகிறது. இப்படிக் கெட்டுப் போகும் பொருளுக்கு (Perishable goods) ஒரு தோராய விற்பனைப் புள்ளி கொடுக்க இயல்வது எப்படி ?

மாமிசம் முக்கிய உணவாகவும், பெருவாரியான மக்களால் உபயோகப்படுத்தப்படுவதாகவும் கருதப்பட்டு, முக்கியத் தேவையான விதி விலக்குப் பெற்றுள்ள பொருள்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வியாபாரிகள் பல ஆண்டுகளாய் தம் துன்பந் தொல்லைகளை எடுத்துக் கூறி வந்ததன் பயனாய், அரசினர் 1954-ம் ஆண்டு ஏப்ரல் முதல் விற்பனை வரி விதி விலக்கு அளிக்க நடவடிக்கைகள் எடுத்தனர். ஆனால் இப்போது மறுபடியும் தொல்லைகள் உருவாகுகின்றன. எனவே கேட்டுக்கொள்கிறோம்: நெடுங் காலமாகக் கஷ்டப்பட்டு வரும் எங்கள் சிறு வியாபாரத்தின் மீது மீண்டும் விற்பனை வரியைச் சுமத்தாது, விற்பனை வரிக்குப் பூரண விலக்களித்திடுக.

இப்படிக்கு,

மதுரைநகர் ஆட்டிறைச்சி சில்லரை
விற்பனையாளர்கள் சங்கம்,
55, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.

அ. பிச்சை,
செயலாளர்.

நினைத்ததும் நடந்ததும்

★

சிந்து பாடும் சிற்றாற்றின் கரையோரத்தில் மனித நடமாட்டமில்லா ஒரு புறத்தில் அந்தச் சிற்பி சிலையை வடித்து முடித்தான்! முடித்தான் என்று எளிதாகக் கூறி நாம் முடித்துவிட்டோமே தவிர, அந்தச் சிலையை வடிக்க அவன் எண்ணிய எண்ணங்கள்—சிந்தித்த சிந்தனைகள் எத்தனை எத்தனை! எண்ணமுடியாத இரவுகள் ஓயாது ஒழியாது சிந்தித்திருக்கிறான்! இவ்வளவுக்கும் பிறகுதான் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது கண்துஞ்சாது கடமையே கடன் எனக் கொண்டு தன் எண்ணத்தின் ஒவ்வொரு அணுவையும் உருவாக்கினான் அந்தச் சிலையாக. இத்தனைக்கும் அவன் மனம் மொத்தமாக வேண்டியது இந்தச் சிலைபோல் வேறு சிலை இவ்வுலகிலேயே இல்லை என்று பிறர் கூறி மகிழவேண்டுமென்பதுதான். தன்னுடைய கலையின் திறனை பிறர் போற்றவேண்டும் என்பதுதான்!

சிலை வடிவெடுத்தது! உருவெடுத்த அந்த உள்ளங்கவர் சிலைக்குமரியைச் சிற்பி பலப்பல கோணங்களிலே நின்று கவனித்தான். மற்றவன் குறை கூறிவிட்டால், குறை உண்மையிலேயே குறையாக இருந்தால் தன் பன்னெடு நாட்களின் உழைப்பு, உதவாக் கதையாக அல்லவா ஆகிவிடும் என்ற எண்ணத்தால் பார்த்தான். அவன் எந்த முனையிலே இருந்து பார்த்தாலும் அந்தச் சிலை எழிலே காட்டியது! சிலை வடிக்கப்பட்ட இடத்தை விட்டு அதே சிற்றாற்றின் கரையிலேயே இரவோடு இரவாக மனித நடமாட்டம் உள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது. அதேபோது சிலை வடித்த சிற்பியும் மறைந்துவிட்டான்!

மக்கள் கண்டு மகிழும்போது தான் அங்கே இருக்கக்கூடாது—இருந்தால் அந்த மகிழ்ச்சியே தனக்குப் புகழ்ச்சியாக மாறித் தன்னை மமதையாளனாக மாற்றிவிடும். அதனால் தன் கலை அழியும் என்ற காரணத்தால் சிற்பி எங்கெங்கோ சென்றான்! தன் கலைத்திறனை—சிற்ப நுட்பத்தைக் காட்டினான்; எனினும் முன்னர் வடித்த அந்தச் சிலைபோல வேறு சிலைவடிக்க முடியவில்லை. இப்பொழுது வடிக்கின்ற சிலைகளும் அந்தச் சிலையின் சாயலையே கொண்டிருந்தன. காரணம் அவன் எண்ணம் பூராவும் எத்தனையோ காதங்கள் கடந்து வந்திருந்தும் முன்பு தன் முழுத் திறனையும் கொண்டு வடித்த அதே சிலையைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்ததுதான்!

ஒரு முறையாவது போய்ப் பார்த்து வருவோமே என்ற நினைவு எழ ஆண்டுகள் சில ஓடிய பிறகு வந்தான்! தான் சிலையை விட்டு விட்டுச் சென்ற இடத்தை நோக்கிச் சென்றான்! அங்கே அவன் வடித்த சிலையைக் காணவில்லை. அதற்குப் பதிலாக புதிய பெரிய கோவில் ஒன்று இருந்தது. அதிலே ஒரே கூட்டம். எப்பொழுதும் மக்கள் வெள்ளம்.

கோயிலுக்குள் போய்க்கொண்டிருந்த கூட்டத்திடம் சென்று, ஒருவரை நோக்கிக் கேட்டான். "சில வருடங்களுக்குமுன் இந்த நதிக்கரையிலே இருந்த ஒரு சிலை எங்கே ?" என்று!

அதற்கு அவர் "இது தெரியாதா உங்கட்கு? அந்தச் சிலைதான் இந்தக் கோயிலுக்குள்ளே இருப்பது. அதன் மகத்துவமே தனிதான். போங்கள்!" என்றார். சிற்பிக்குச் செந்தேனைத் தன் வாயிலே ஊற்ற அது உள்ளமெல்லாம் இனிப்பதுபோல இருந்தது. சிற்பிக்கு மேலும் எதையும் அவரிடம் வினவி அறிய வேண்டும் என்ற எண்ணமே இல்லை. அறிந்துகொண்டு சென்று கண்டால் அதிலே சுவை இருக்காதல்லவா? சிலையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் முந்த சிற்பியின் கால்கள் முந்த, அவன் மனம் கற்பனைக் கனவுகளிலே முந்த, "ஆகா, நாம் கலையைச் சிலையாக வடித்தோம். மக்களோ கலைக்கோயிலைக் கண்டுவிட்டார்கள். அக்கோயிலிலே நம் கலைக்குமரி கண்காணுக்காட்சியாகக் கொலு வீற்றிருப்பாள்!" என்ற எண்ணக் குமிழிகள் எழக் கோயிலுக்குள்ளே ஓடினான். அங்கே சிற்பி வடித்த சிலை இருண்ட குகையிலே எழிலிழந்து பொலிவிழந்து, கறுத்த மேனியாகக் காட்சியளித்தது! அதைக் கண்டவுடன் சிற்பியின் நிலை? மன்னன் ஒருவன் கட்டிய கோட்டை அவன் முன்னே மண்மேடாகிக் கொண்டிருந்தால் அவன் மனம்எப்படி இருக்குமோ அதைப்போல் ஆயிற்று!

சிற்பி அவனையும் அறியாமல் ஓங்கிக் கத்திக்கொண்டே ஓடினான் சிலையை நோக்கி..."என் எண்ணத்தின் முழு உருவே, உனக்கா இந்த கதி" என்று! அதற்குள் அங்குள்ளோரில் சிலர் அவனைப் பிடித்துக்கொண்டனர்! "ஏன் என்னைத் தடுக்கிறீர்கள் ?" என்றான். "அங்கே போகக்கூடாது!" என்றனர், "அப்படியானால் என் சிலை ? என்றான் சிற்பி. "சிலையா? இது கடவுளப்பா-தெய்வ பிம்பம்" என்றனர் அந்தச் சிலர்! "இல்லை வெறும் கல். நான் வடித்த சிலை!" என்றான் ஆவேசமாக. இந்தச் சொல்லைக் கேட்டவுடன் அந்தச் சிலர் இவனை வெறிக்கப் பார்த்தனர். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். எல்லோரும் ஏகமனதாக "இவன் பைத்தியக்காரன், அம்மன் சிலையை உடைத்தாலும் உடைத்துவிடுவான்" என்று கூறியவாறே கோவிலுக்கு வெளியே கொண்டு வந்து தள்ளினர்!

சிற்பி ஏதேதோ சொன்னான். என்னென்னவோ பேசினான். பின் தன்னை மறந்து சிரித்தபடியே நகர்ந்தான்!

—கரந்தை கணேசன்

? வினா — விடை

கூடலரசன் பதிலளிக்கிறார்

மு. வெ. சீலன்,
இராயபுரம், சென்னை.

கம்யூனிசத்திற்கும், சோசலிசத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை, விளக்கவும்!

ஒரு தாய் வயிற்று இரட்டைக் குழந்தைகள்! ஒரு நாட்டில் தனிப்பட்ட சொத்துரிமை ஒழிக்கப்பட்டு, அனைத்தும் அரசாங்கத்தின் உடைமையாவது பொதுவுடைமையாகும்! தனிப்பட்ட சொத்துரிமைகள் அனுமதிக்கப்பட்டாலும், ஒருவருக்கொருவர் உயர்வுதாழ்வின்றி சரிநிகர் சமானமாக, ஆண்டான் அடிமை நிலைமாறி வாழ்வது சமதர்மமாகும்! இந்த இரண்டு நிலைக்கும் இடையிலே சிக்கி ஊசலாடுவது பஞ்ச சீலப் பண்டிதரின் மாதிரி சோசலிசமாகும்!

★

கழகத் தமிழன், சென்னை-12.

கழகத்தவர்க்குப் பேசத்தான் தெரியும்; செயலில் காட்டமாட்டார்கள் என்று கம்யூனிஸ்ட்கள் சொல்வது சரியா?

பேசத் தெரியுமென்றாவது கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால் அது பாராட்டப்படவேண்டியதாகும்! இத்தனை நாட்களாக இந்தத் தடுக்கு மொழியாளர்கள் அடுக்கு மொழியைக் கேலி செய்தார்கள்! பேச்சுடன் செயலும் நிறைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாத கம்யூனிஸ்ட்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள்! அதிகார மமதைக்கு உருக்குப் போன்ற எதிர்ப்புக் காட்டும் வீரர்கள்—ஊட்டிக்குப் போகிறார்கள் ஊராள்வோருடன்! சொல்எங்கே? செயல் எங்கே?

★

சா. பா கருமராசு,
தாரவாணிநகர்.

தென்றல் 7-2-59 இதழில் நாடோடி மன்னன் வினா-விடையை விளக்கவும்!

மதுரை தங்கம் தியேட்டரில் 'நாடோடி மன்னன்' படம் நடைபெற்ற நாட்களில் கம்யூனிஸ்ட்கள் வாயிலில் கொடியேந்தி நின்று உண்டியல் வசூலித்தது உண்மை! என்னிடமும் கேட்டார்கள் ஒரு நாள். ஆனால் கதையிலே புதுமையில்லை என்று தூற்றவும் தவறவில்லை!

★

மணிமாறன், காஞ்சிபுரம்.
ஜி. கே. வேலன், சத்திரப்பட்டி

கம்யூனிஸ்ட்கள் உதகைக்குச் செல்லச் சம்மதம் அளித்ததன் மர்மம் என்ன?

காங்கிரஸ்காரர்களுடன் கை கோர்த்துக்கொள்வதில்கம்யூனிஸ்ட்களுக்கு இப்போதெல்லாம் ரொம்ப மகிழ்ச்சியாம்! கழகம் எதிர்ப்புக் காட்டியும் உதகைக்குப் போகும் உல்லாச வாசிகளுக்கு உழைப்பாளர் நலன் பேசியே உலவவும் உயிர் வாழவும் இருக்கின்ற கம்யூனிஸ்ட்கள் தங்கள் இணக்கத்திற்கு இன்றுவரையிலும் சரியான காரணம் சொல்லவில்லை! ஆனால் கழக உறுப்பினர்களுடைய முடிவைச் சாடுகிறார்கள்! அலமச்சர்களையும், உதகை உறுப்பினர் மாத'கவுடரின்' 'பொன்மொழி'களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுகிறார்கள்! சர்க்காருடைய நிர்வாகத்தின் நிபந்தனையில்லாமல் ஒத்துழைப்புத் தருகிறார்களாம். இந்தக் கேடு கெட்டவர்கள்தான் நாடு தங்களையே நம்பியிருப்பதாகவும் சொல்லிக்கொண்டு, நடமாடுவது மக்களை மயக்கும் மர்மமாகும்!

★

கு. சந்திரமோகன்,
குடியேற்றம்.

நீங்கள் தென்றலில் எழுதும் கட்டுரைகளைப் பார்த்துக் கம்யூனிஸ்ட்கள் கிண்டல் செய்கிறார்கள். உங்களுக்குத் தெரியுமா?

தெரியும் நண்பரே! எனக்கும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களின் தன்மையிலே அறிவில்லாதவர்கள் என்று குறை கூற மாட்டேன். அரசியல் அறிவு இருக்கிறது. ஆனால் அதிலே நேர்மையான தெளிவு இல்லை. கேலி பேசித்தான் நம்மீதுள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்ள முடியும்! புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும். துணிவிருந்தால் மறுப்புரைகள் தருவார்கள். அந்த நம்பிக்கையை முன்பே நான் மறந்துவிட்டேன்.

★

ஏ. கே. பஞ்சாட்சரம்,
ராணிப்பேட்டை.

பீடித் தொழிலாளர்களைக் கம்யூனிஸ்ட்கள்தான் காப்பாற்றுகிறார்களா?

டனிரெண்டணா கூலி உயர்வை இரண்டணா அளவில் நிறுத்திக் கொள்ளும் கம்யூனிஸ்ட் கல்யாண சுந்தரங்கள் பீடித் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாகக் காட்டிக் கொடுத்தார்கள் திருச்சி பீடி முதலாளிகளுக்கு! மேலப்பாளையம் பீடித்தொழிலாளர்களும் கம்யூனிஸ்ட்களை நம்பியிருந்தால் நிச்சயம் நட்டாற்றில் நழுவ விட்டிருப்பார்கள். நடக்கவில்லை அப்படி!

★

கே. ஏ. மீருமைதீன்,
காங்கியம்பாளையம்.

மார்க்ஸீயத் தத்துவத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மார்க்ஸ்தான் தங்கள் வழி காட்டியென்று வாய் வலிக்கப் பேசினாலும் உண்மையில் கேரளத்தின் முதலமைச்சர் சங்கரன் 'நவகேரளம்' என்ற புத்தகத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியைத்தான் கேரளக் கம்யூனிஸ்ட் கட்சி வழி காட்டியாகக் கொண்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார். ஜீவானந்தம் போன்ற புதிய பாகவதர்கள் கம்பனுடைய காமரசக் களஞ்சியத்திலும் மார்க்ஸ் தத்துவம் உண்டு என்று பேசுகிறார்கள். மார்க்சியத் தத்துவத்திற்கும் இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்கும் தொடர்பு வைத்துப் பேசுவதே தவறுதான், இனியாவது அவர்கள் திருந்துவார்களா?

★

சு. வே. மாணிக்கம்,
சங்கரள்ளி.

கம்யூனிசம் என்பதும் கம்யூனிஸ்ட் என்பதும் ஒரே பொருள் குறிக்கும் இரு சொற்களா?

வேண்டாத இந்தச் சந்தேகம் ஏன்? கம்யூனிசம்-ஒரு தத்துவம். இதனை இதயத்திலே நிறுத்தி செயல்படுபவன் கம்யூனிஸ்ட்! கம்பனுடைய காலடியில் வீழ்ந்து அனுமனுக்கு வால் வளர்ந்த வகையைப் பாராட்டி விட்டு, அதே நேரத்தில் அணு ஆயுதம்பற்றியும் பேசுகிறவன் கருங்காலி!

★

இரா. மதிவாணன்,
மன்னார்குடி.

இனப் போராட்டத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் உள்ள மாறுபாடு என்ன?

வரலாற்று அடிப்படையில் வளரும், வாகை சூடும் இனப்போராட்டம்! சூழ்நிலைகளுக்கேற்ப உருவாகும் வர்க்கப் போராட்டம், பலன் பெற்றதும் மறைந்து போகும் - அணைந்த விளக்காகும்!

★

அர. இராசாராமன்,
வளவனூர்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏன் ஒரு தலைவரில்லை?

தலைவரென்றால் ஒருவர் தான் இருக்கமுடியும். செயலாளர்கள் என்றால் எட்டுப் பேரும் இருக்கலாம். எட்டு வகையான காம்ரேட் கோஷ்டிகளைச் சமாளிக்க வசதியாக உள்ளது! இல்லையென்றால் பொதுச் செயலாளர் பதவி ஏலத்திற்கு வந்துவிடுமே!

★

எ. எல். நல்லையா,
மாகூல், பம்பாய்.

திராவிட நாட்டுத் தனியரசு அமைப்பில் பொதுவுடைமை உண்டா? ஆமென்றால் ஜனசக்தி வட்டாரம் எதிர்ப்பது ஏன்?

திராவிடக் கூட்டரசு அமைப்பு சம தர்ம எழிலுடன், பொதுவுடைமை மணங்கமழ, சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி என்ற உயர் நோக்குடன் இலங்கும் என்று பன்முறை சொன்ன பிறகும் 'ஜனசக்தி' வட்டாரம் உணரவில்லையென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் 'மாஸ்கோ' முத்திரையை எதிர்பாராததுதான்!

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
நெ: 6, சங்குபிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

குருஷேவ்தாசன், திருச்சி.

"'உதயசூரியன்' தமிழ்ச்சொல் அல்ல; அதனைத் தேர்தல் சின்னமாக எடுத்துக்கொள்ள வெட்கமாக இல்லையா?" என்று இங்கு நடைபெற்ற கூட்டத்தில் ஜீவானந்தம் கேட்டது சரியா?

நான் சொல்வது அவருக்குக் கேட்குமா என்பது சந்தேகம்- ஏனென்றால் தேர்தல் குழு வைத்துள்ள பெயர்களிலிருந்துதான் கட்சிகள் சின்னங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சாதாரண உண்மைகூட அவருக்குத் தெரியாமல் போய்விட்டதே! அண்ணா அறிஞர் அல்ல என்று பேசிவிட்டு, அவர் பேசுகிற வைத்தியக் கல்லூரித் தமிழ் மன்றக் கூட்டத்திற்கு ஓடிப்போய்த் தலைமை வகிப்பதைவிட வெட்கம் கெட்ட செயலா இது? ஜீ'யைக் கேளுங்கள்!

தோழர் எஸ். ஏ. டாங்கே ரூ 5000 சம்பளம் பெறுவதாக, "கரண்ட்" ஏடு கூறுவதற்கு ஆதாரம் என்ன?

இந்தத் தொகையை வைத்துத் தன் குழுவை டாங்கே செழுமைப்படுத்திக்கொள்வதும், அதனால் மற்றத் தலைவர்களுடன் ஏற்படும் மனக் குமுறல்களும், டாங்கேயை மத்தியக் கமிட்டிக் கூட்டங்களில் பேசவிடாமல் தடுப்பதுவும், டாங்கே மறுக்காமல் தத்தளிப்பதும் 'கரண்ட்' குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக இருக்கலாம்!

★

என். கே. மூர்த்தி,
பம்பப்படையூர்.

மணலி கந்தசாமி முன்பு வெற்றி கண்ட தொகுதியில் தோல்வி அடையக் காரணம் யாது?

1952 தேர்தலின்போது அவர் நெஞ்சத் துணிவுடன் நான் ஒரு கம்யூனிஸ்ட், கொள்கைப் பிடிப்புள்ளவன், லெனினுடைய நேர் வாரிசு, மார்க்சியத் தத்துவங்களில் ஸ்டாலினுக்கு அடுத்தபடி நான்தான் பண்பட்ட மனிதன் என்றெல்லாம் சொல்லிக்கொள்ளாமல் 'அண்டர் கிரவுண்ட்' தலை மறைவு வாழ்க்கையில் இருந்தார். அதையே ஒரு தகுதியாக வைத்து ஓட்டுப் பெற்றார்கள்! 1957 தேர்தலில் தோற்றார் என்றால் அது பொதுமக்களின் தீர்ப்பு!

ஜூபிடரின்
அண்ணா பத்தி
JUPITER PERFUMERS
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

விருத்தப் போட்டி

சகமுழுதும் ஆண்டதமிழ் சாற்றும் பெண்மை
தளதளக்கும் மேனிக்குத் தஞ்சம் சொன்னேன்
சுகமனைத்தும் ஈகின்ற சொர்க்க போகம்
சுழல்கின்ற உன் விழியில் கண்டேன் உண்மை;
யுகமெனவே செல்கின்ற மாலை செய்யும்
உபத்திரவம் தாங்காமல் உன்றன், திங்கள்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—சி.சிவராமலிங்கம், சென்னை.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே
அகமகிழப் பேசிடநான் அருகில் வந்தால்
ஆவலினைச் சிறைப்படுத்தல் அழகோ கண்ணே
திகழுமுயிர்க் காதல்மொழி பேசி இன்பம்
திளைத்திடநீ செய்யாமை நன்றோ சொல்வாய்
பகலிரவாய் உனையெண்ணிப் பாசம் உற்றால்
பழித்திடுதல் முறையாமோ பருவப் பெண்ணே!
—அரிமழம் இராமகணபதி.

★

இகல்தூர்த்து மார்பகத்தில் வாகை சூடி
இசைசூழ வேல்விழியாள் உன்னைத் தேடி
நகைமலர்ந்த செவ்வாயின் அமுத ருந்தி
நல்லின்பம் துய்த்திடற்கே எண்ணங் கொண்டே
அகமலர்ந்து வந்திட்டேன்; வரவேற் பில்லை!
அழகொளியே நான்பிந்தி விட்டேன் என்றா?
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—சு. ச. ஆறுமுகம், அறுப்புக்கோட்டை.

★

பகலவனைக் கீழ்வானில் கண்டு பூத்த
பங்கயம்போல் நல்லழகு சொட்டும் உன்றன்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
அகத்தினிலே மூண்டெரியும் காதல் தீயில்
ஆவிஉடல் வெந்துபாழ் ஆகா வண்ணம்
இகழாமல் பிழைபொறுத்தே அருகில் வந்துன்
இன்முகத்தைக் காட்டிஎனக் கின்பம் தாராய்.
—குகன்குருசாமி, கமுதி.

★

அகமெல்லாம் ஆர்வமது பெருகி நிற்க,
அணைத்தென்னை முத்தமிட வந்தார் அத்தான்!
மிகநாணம் கொண்டுதலை குனிந்து நின்றேன்;
மெதுவாக நடந்தென்னை அணுகி வந்து,
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
அகமகிழத் தலைநிமிர்ந்து பார்த்தி டாயோ
அமிழ்தே!நீ ஒருமுறையென் றணைத்தார் என்னை!
—மு. இராமச்சந்திரன், சேலம்.

★

முகிலனைய மலைமுகட்டைத் தழுவிக் கீழே,
முழுகுகின்ற செங்கதிரின் எழிலைப் பாராய்.
புகையணைத்த கார்முகிலை அகற்றி வண்ணப்
பொன்னிலவும் அல்லியினைத் தேடல் பாராய்.
அகமகிழத் தென்றலிள வரசன் வந்துன்
அழகுடலைத் தழுவுதலை அறிந்தே வண்ண
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—முத்துராசன், பொள்ளாச்சி.

★

சுகநலியத் தினந்தினமுன் தோய்வை யுன்னிச்
சோறின்றித் துயிலின்றிச் சோர்ந்தேன் காணாய்!
அகநலிய மிகவருத்த மடைந்தே னன்பே!
ஆரமுதே, தேறுமொழி கூறு திங்கே
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா? பெண்ணே!
மிகநலிய விட்டிடிலோ, விளையும் பாவம்!
வேறென்றும் கூறாமல் மேவாய், மெல்லி!
—அ. சுருளியாண்டிப் பாவலர் கோம்பை.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
அகமலரில் வாழஇடங் கேட்டு நின்றால்
அலைகடலைச் சுட்டுவது சரியா பெண்ணே?
பகல்வெறுத்துப் பால்நிலவில் வந்து நின்றால்
பதைபதைக்கப் பேசுவதும் சரியா பெண்ணே!
அகல்விளக்கைக் காற்றணைக்க மென்கை தொட்டால்
அகன்றுமறைந்(து) ஓடுவதும் சரியா பெண்ணே?
—மு. கோவிந்தராசன், வாணியம்பாடி.

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
அகமலரச் செய்திட்ட அடியேன் கூட
அதைக்காணும் பேறிழத்தல் நன்றோ கண்ணே?
இகமதனில் யான்கண்ட இன்பக் குன்றே!
ஐம்புலனுக் கேற்றவிருந் தளிக்கும் செல்வீ!
சகமுழுதும் தந்தாலும் வேண்டேன்; அஃதுன்
தளிர்மேனிக் கீடாமோ? சாற்றாய் சற்றே.
—தாம்பரக்கிழான், தாம்பரம்

★

அகம்விட்டே அயல்நாடு சென்றி ருக்கும்
அன்புருவா மாளனவன் வருநா ளேங்கிப்
'புகைபடிந்த ஓவியமாய்' ஆனாய், இன்றோ
போர்வென்றோர் நாட்கழித்து வந்தால் என்ன?
முகைவிரிய மலர்மணக்கத் தென்றல் தூண்ட
முழுதுயிரும் நீயன்றி நில்லா தாக
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—மா. பொ. இராமச்சந்திரன், ஏலம்பாக்கம்.

★

அகமலரே! அன்றொருநாள் தாழைக் காட்டில்
அழகுமுகம் காட்டிவர வேற்றே இன்பச்
சுகங்காட்டி நின்றதெலாங் கன்வோ? அன்றிச்
சுத்தவெறுங் கற்பனையோ? சொல்வாய் நீதான்
முகிற்கிழித்து வெளிக்கிளம்பும் கதிரொ ளிக்கு
முன்பனியாய் மறைகின்றாய்! என்னே கோபம்!
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—சோம. தமிழரசன், மானாமதுரை.

★

அகம்புறமும் கற்றவள்நீ, இலக்கி யத்தின்
அவல்மேடு புரிந்தவள்நீ; பகையெ திர்ந்தால்
குகைப்புலியும் துஞ்சாது தெரிந்தி ருப்பாய்;
"கொடும்பகைமுன் கொவ்வையிதழ்!
பொறுபொ" றென்று
சகங்காக்கத் தகையாளன் சென்றான்; ஆனால்
தடவாளிற் செங்குருதி காயா முன்னம்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—ப. கணபதி, சோழபுரம்.

★

முகையினிலே உள்ளதொரு நாற்றம் போல
முறுவலிலே உள்ளதொரு குறிப்புக் கண்டே
அகத்தினிலே எழுகின்ற அன்பை யெல்லாம்
அழகுதமிழ்க் கவிதையிலே காட்ட எண்ணி,
முகிலிடையே மலருகின்ற நிலவு போல
மென்குழலின் கற்றையிடை விளங்கு கின்ற
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—வானவன், சென்னை-4.

★

அகமலரோ மிகமலர்ந்து வுனைய டுத்தேன்
அதிகநய குணவதியென் அன்பே இன்பத்
தகைமலரின் கொடியேவீண் சால மேனோ?
தருமமல்ல செய்வதிது தகுமோ யிந்தச்
சகமலர்ந்து மிகவிரிதல் பெண்ணா லென்பர்
தகவுடையோர் கூற்றீதென் றறியா யோநீ
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே.
—சி. காரையா, தஞ்சை.

★

திகட்டாத திங்கனியே! வான்வி ளக்கே!
தென்குமரிக் கடல்முத்தே! புள்ளி மானே!
சுகமீயும் கனியமுதே! பேசும் யாழே!
சுழல்விழியே! மலர்வனமே! தென்றல் பாவாய்!
புகழ்கொண்ட காவியமே! பொன்னி தந்த
பூங்கொடியே! ஓவியமே! நாண மேனோ?
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—தஞ்சை. முத்துதாசன்.

★

சுகமலர வெளியெங்கும் ஒளியைத் தேக்கி,
சோதியுரு வாய்த்தோன்றும் சூரி யன்தான்
இகமலரக் குணவெற்பில் எழுந்த காலை,
ஏங்கிமுடி சாய்த்துநிற்கும் தாம ரைபோல்,
அகமலர, ஆருயிர்நின் றாச லாட,
அன்புடனே சொல்லாட ஆசை கொண்டு
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—மு. புருஷோத்தமன், சேலம்.

அகத்திருக்கும் வண்ணமிகு மலரே தேனே
ஆணவத்து நஞ்சுணர்வார் வந்தோர் ஆட்சி
புகுத்துகின்ற பிழைஎதிர்த்துச் சிறைக்குச்
சென்றேன்
பொன்மயிலே இல்லைஎனில் பிரிந்தா வாழ்வேன்?
பகைச்சிறையில் புகுந்துவிட்ட கணமே என்றன்
பைங்கிளியே நெஞ்சறையில் புகுந்து விட்டாய்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—இளங்கோ, தேவகோட்டை.

★

தகதகவென் றேஎழுந்த தங்க வட்டம்
தலைதூக்கிக் கீழ்வானில் சிரிக்கும் வேளை
தொகைதொகையாய் மலர்பூத்த பொழிலில் மாலை
தொடுப்பதற்குப் பூப்பறிக்க வந்த போதில்
அகமலரைப் பறிக்காமல் பறித்தாய், இப்போ(து)
அண்டையிலே யாருமிலை என்ப தாலே,
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—எம். கே சீனிவாசன், சென்னை-30.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
அகமதிலே உன்நினைவு கொண்டோ ருக்குன்
அன்பான வரவேற்பும் இதுவா கண்ணே
பகலிரவாய்த் துன்பத்தில் ஆழ்த்தி விட்டென்
பக்கமுகம் காட்டாம லிருக்கும் உன்னை
இகழ்ந்திங்கே எழுதாமல் இருப்ப தற்குன்
இதழமுதம் தருவாயா வந்து முன்னே?
—வே. கா நாதன், பட்டமங்கலம்.

★

அகமலரத் தமிழ்த்தாயின் வாழ்வைக் காக்க
அறப்போரில் பங்குற்றேன் மீண்டு வந்தேன்
புகழ்மலரைச் சூடுதற்குப் போட்டி யிட்டுப்
புரட்சியினில் வாகைமலர் சூடி விட்டேன்
வகைமலர்கள் பலவற்றைச் சுமந்து நிற்கும்
வளர்கொடியே பிடிநடையாய் துடியி டையே
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—கு. நடராசன், புதுக்கோட்டை.

★

திகழுகின்ற முழுநிலவில் தழுவச் சொல்லும்,
தென்றலிலே ஒன்றாகக் கூடச் சொல்லும்,
நிகழுகின்ற உலகையெலாம் மறந்து விட்டு
நெஞ்சோடு நெஞ்சிணைய நிதமும் சொல்லும்,
அகமலர அதரமதில் எனது முத்தம்
அடுக்கடுக்காய்ப் பெறச்சொல்லும், மனதைக்
கொண்டு
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—பி. இ. ஆதவன், பம்பாய்-38.

★

பகற்போது முழுவதுமே உழைத்துச் சோர்ந்து
பசியோடும் இல்லிற்குச் செல்லும் போது
ககனத்தின் ஒளிவிளக்காம் நிலவு தோன்ற
கட்டவிழும் அல்லியிலே செந்தேன் மொண்டு
சுகமாகக் குடிக்கின்ற சுரும்பு கண்டு
சுவையிதழின் தேன்பருக எண்ணம் கொண்டு
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
—மு. கிருஷ்ணசாமி, சென்னை-1.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
பகையனைத்தும் தூள்தூளாய்ப் பறக்க விட்டு,
பாசமுடன் உறவாட ஓடி வந்தேன்!
முகமென்னும் வட்டநிலா அமுது சிந்த
மெய்மறந்தேன் கனிச்சுவையே! பொன்னால்ஆன
நகையெனக்குத் தேவையில்லை நகைப்பு வேண்டும்
நான்வாழ! முகந்திருப்பு; மௌனம் போதும்!
—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

★

பகையலறப் போராடி வெற்றி கண்டு
பார்புகழ வருகின்ற வீரன் போலே!
குகைதாண்டிப் பகைதாண்டி உன்றன் தந்தை
குவித்திருக்கும் வேல்முனையைத் தாண்டி,
உன்றன்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?
நகைக்காக ஊடுதலா? இல்லை, நாணம்
நங்கையர்க்கே உரிமையென்ற விளக்கம் தானா?
—போடி-மீராமன்னன்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.